www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

1—15 டிசம்பர் '87

3-௨

விலை ரூ: 1

ார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு



## வாரிசு ஆட்சி:

## கதர் குல்லாய் வழியில் நடைபோடும் எதிர்க்கட்சிகள்!

படிப்பகம்

www.padippakam.com

# ஜனநாயக விரும்பிகளின் அரிதாரம் கலைந்தது



தூய்மையான ஜனநாயகத்தையும், கருத்து சுதந்திரத்தையும் நிலைநாட்டுவதற்காகவே தாம் பாசிச ராஜீவுடன் முட்டி மோதுவதாக பம்மாத்து செய்யும் இந்தியன் எக்ஸ்பிரஸ்—தினமணி, சங்கிலி தொடர் நிறுவனத்தின் முதலாளி கோயங்கா, ஆசிரியர் அருண் ஷோரி, 'சுதந்திர'ப் பிரியர்கள், ராஜீவ் தலைமையிலான பாசிச கும்பலுக்கு சற்றும் குறையாத எதிரணி பாசிச கும்பல்என்பதை அழுத்தமாக நிரூபித்துள்ளனர்.

கூலி உயர்வு கோரிக்கை வைத்துப் போராடிய டில்லிகிளை எக்ஸ்பிரஸ் ஊழியர்களை கடந்த நவம்பர் மாதம் முழுவதும் ஆசிரியர் அருண்ஷோரி நேரிடையாக மிரட்டினார். தொழிலாளர்கள் பணிய மறுக்கவே தங்கள் அடியாள் படையான ஆர்.எஸ்.எஸ் குண்டர்களைக் கொண்டு மிரட்டியும் தாக்கியும் பார்த்தார். முடியவில்லை. கடைசியில், டில்லி போலீசை துணைக்கு அழைத்து போராட்டத்தைச்சிதறடிக்கும் வேலையில் இறங்கினார்.

போராட்டத்தை முளையிலேயே கருவறுக்க, கோரிக்கைவைத்து பேச்சு வார்த்தைக்கு நிர்ப்பந்தித்த தொழிலாளர்களை புறக்கணித்துவிட்டு, போராட்டத்தை எதிர்த்த கருங்காலிகளை அடிக்கொரு தரம் அழைத்து பேசினார். புறக்கணிக்கப்பட்ட தொழிலாளர்கள் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றனர்.

தொழிலாளர்கள், ஊர்வலம் சென்றபோது சுந்தர் நகர்-கோயங்கா விருந்தினர் மாளிகை அருகே பாரதீய ஜனதா, ஆர் எஸ் எஸ் குண்டர்கள் அவர்களைச் சூழ்ந்து வெறிகொண்டு தாக்கினர். தாக்குதலை எதிர்பாராத ஆர்ப்பாட்டக்காரர்களில் சிலர் அருகில் இருந்த டைம்ஸ் ஆப் இந்தியா வளாகத்தினுள் நுழைந்து தப்பிக்க முயற்சித்தனர். விடாமல் துரத்தி அடித்தனர் ஆர் எஸ் எஸ் குண்டர்கள். இதில் 'டைம்ஸ்' பத்திரிக்கை ஊழியர்கள் சிலரும் தாக்கப்பட்டனர்.

'இந்து' பத்திரிக்கை நீங்கலாக ஒன்றிணைந்த டில்லி பத்திரிக்கை ஊழியர்கள், எக்ஸ்பிரஸ் நிறுவனத்தின் தொழிலாளர் விரோதப் போக்கை எதிர்த்து அக்டோபர் 29ந் தேதி மொத்தமாக ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்திக் காட்டினர். "29ந் தேதி பத்திரிக்கை வெளிவராவிட்டால், டில்லி கிளையையே இழுத்து மூடிவிடுவோம்" என்று மிரட்டிப் பார்த்த எக்ஸ்பிரஸ் நிர்வாகம் மூக்கறுபட்டு, கருங்காலிகளை வைத்து, 5000 பத்திரிக்கைகளை மட்டுமே அன்று அச்சடித்து அலுவலகம் இயங்கியதாக தனக்கு தானே பெருமை அடித்துக் கொண்டது.

ஆசிரியர் அருண்ஷோரிக்கு கையாளாக சென்னையிலிருந்து சென்றிருந்து துக்ளக் சோவும், தொழிலாளர்களின் எதிர்ப்பால் அலுவலகத்தினுள்ளே தனியாக போகவும் அஞ்சினார். ஆர் எஸ் எஸ் குண்டர்கள், போலீசு பாதுகாப்புடன்தான் அலுவலகத்தில் வாசம் செய்தார். அவர்களது உணவு கூட போலீசு பாதுகாப்புடன்தான் உள்ளே சென்றது.

தொழிலாளர்களின், உறுதிமிக்க தொடர்ச்சியான எதிர்ப்பைக் கண்டு ஆத்திரம் அடைந்த நிர்வாகம், போலீசை பல வழிகளில் தூண்டிவிட்டு தொழிலாளர்களின் மீது ஏவியது. அலுவலக வளாகத்தில், நிர்வாகத்துடன் ஒத்துழைத்த போலீசுக்கு 'நன்றி' தெரிவித்து, ஆயிரகணக்கில் நோட்டீஸ் அடித்து ஒட்டியது. கருங்காலிகளுக்கு 'நன்நடத்தை போனஸ்' என்றும், 'வன்முறை'யாளர்களால் பாதிக்கப்பட்டதற்காக 'மருத்துவ உதவி பணம்' என்றும் வாரி வழங்கி ஊக்குவித்தது.

பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்காக குரல் கொடுத்த டில்லி பத்திரிக்கையாளர்கள் சங்கத்தையும் உதாசீனப்படுத்தி, தொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்க மறுத்தது. டில்லி பத்திரிக்கையாளர் சங்கம், பாரதீய ஜனதா கட்சியும், ஆர் எஸ் எஸ் அமைப்பும் தொழிலாளர்கள் மீது தொடுத்த தாக்குதலுக்கு பகிரங்கமாக மன்னிப்பு கேட்கும்வரை, அவர்களுடைய நிகழ்ச்சிகளைப் புறக்கணிக்குமாறு அனைத்து பத்திரிக்கையாளர்களுக்கும் அறைகூவல் விடுத்துள்ளது.

பாசிச ராஜீவ் கும்பல் போலவே கோயங்கா, அருண்ஷோரி கும்பல், தங்கள் அலுவலக ஊழியர்கள் போராட்டத்திற்கு காரணம் எதிர்தரப்பினர்தான் என்று குற்றம் சுமத்தி தப்பிக்க முயல்கிறது. ராஜீவின் மீது அடுக்கடுக்காக ஊழல்களை அம்பலப்படுத்துவதால், காங்கிரசுக்காரர்கள் ஊழியர்களை விலைக்கு வாங்கிவிட்டனர் என்று கதைகட்டி விடுகிறது. சோவும் தன் பங்குக்கு துக்ளக்கில், '50 பேர் கொண்ட ஒரு சிறு கூட்டம் அராஜகத்தில் ஈடுபடுகிறது' என்று எழுதி அமெரிக்க அடிவருடி அருண் ஷோரிக்கு தன்னால்ஆன உதவியை செய்தார்.

இந்த லட்சணத்தில் டில்லி கிளை மக்கள் உரிமை கழக தலைமையில் அருண்ஷோரியும் ஒருவர். அவ்வமைப்பின் டில்லி கிளை தலைவர் அருண்ஷோரிக்கு சரியான சூடு கொடுத்து அறிக்கை விட்டார். "பாரதீய ஜனதா கட்சியின் உதவியுடன், தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை உடைத்த அருண் ஷோரி மக்கள் உரிமை கழகத்தில் இணைந்திருக்க எந்த உரிமையும் இல்லை" என்றார்.

ராஜீவ் கும்பலின் கிரிமினல் குற்றங்களை பயன்படுத்தி பத்திரிக்கை தொழிலில் முன்னேறிய கோயங்கா—அருண்ஷோரி கும்பலுக்கு ஒரு நப்பாசை; தூய்மையான ஜனநாயகவாதியாக வேடம் போட்டால், அடுத்து நாம் அரியணைஏறலாமே என்று. பாவம், அவர்கள் வேஷம் பூசிய உடனே அரிதாரம் கலைந்துவிட்டது.

● குணசேகரன்


படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய—லெனினிய அரசியல் ஏடு

மூன்றாமாண்டு

2

1—15 டிசம்பர் '87

தனி இதழ் : ரூ 1
ஆண்டு சந்தா : ரூ 24

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத்தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர் 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை–600 015.

# அரசியல் எதிரிகளை முடமாக்க அரங்கேறும் பாசிச சட்டங்கள்

"எம்ஜிஆர் கட்சியும் ஆட்சியும் செயலற்றுக் கிடக்கின்றன; மருத்துவப் பரிசோதனைக்காக சென்ற எம்ஜிஆர் மூன்று மாத காலத்திற்கு அமெரிக்காவிலேயே தங்கிவிட்டார். அவர் வருகைக்குப் பிறகாவது அரசு செயல்படுமா?'' என்று அக்கறையுடன் காத்திருந்தன பத்திரிக்கைகள்.

சென்னை உயர்நீதி மன்றத்துக்குப் புதிய நீதிபதிகள் நியமன விவகாரம், நடந்து முடிந்த வன்னியர் போராட்டம், சாதி அடிப்படையில் இடஒதுக்கீடு பிரச்சினை, காவிரி நீர் பிரச்சினை, சம்பா சாகுபடிக்கு மேட்டூரிலிருந்து தண்ணீர் திறந்து விடுவது பற்றி முடிவு, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட பஸ் தொழிலாளிகளிடம் பிடித்தம் செய்தஊதியத்தை திருப்பிக்கொடுப்பது பற்றிய முடிவு, அரசு ஊழியர்களுக்கு ஜூலையிலிருந்து கூடுதல் அகவிலைப்படி மற்றும் போனஸ் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கை மீதான முடிவு, வறட்சி, குடிநீர் பிரச்சினை, எல்லாவற்றுக்கும் மேலாக ஈழப் பிரச்சினை முதலான அவசரப் பிரச்சினைகள் அவருக்காக காத்திருந்தன.

எம்ஜிஆர் நாடு திரும்பியதும் வேகமாகச் செயல்படத் துவங்கிய அரசும் சட்டமன்றமும் இவற்றில் எதையுமே தீர்க்கவில்லை. அரசு எந்திரத்தை மேலும் பலப்படுத்தி அதிகாரத்தைக் குவித்துக் கொண்டு அடக்குமுறைச்சட்டங்களை அரங்கேற்றுவதிலேயே குறியாய் இருந்தது. 10 நாட்கள் நடந்த சட்டமன்ற மாரிக்காலக் கூட்டத் தொடரில் அவசர அவசரமாக 25 மசோதாக்கள் கொண்டு வரப்பட்டு கருப்புச் சட்டங்கள் அடுக்கடுக்காக நிறைவேற்றப்பட்டுள்ளன.

கல்வியைக் கடைச்சரக்காக்கிவிட்ட அரசு இப்போது மாணவர்கள் காப்பியடிப்பதைத் தடுக்க கொடூரமான சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. தேர்வு நடக்கும்போது மேற்பார்வையிடும் ஆசிரியர் காப்பியடிக்க ஒத்துழைத்தால் இரண்டாண்டு கடுங்காவல் தண்டனை; காப்பியடித்த மாணவனுக்கு ஓராண்டு சிறை அல்லது அபராதம்; அதோடு 10 ஆண்டுகளுக்குத் தேர்வு எழுத முடியாது என்கிற அவசர சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

வழக்கமாக எதிர்கட்சியினரைப் பழிவாங்கப் பயன்படுத்தப்படும் குண்டர் சட்டம் இப்போது மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. கடத்தல், போதை மருந்து, கள்ளச்சாராயம் காய்ச்சி விற்பது, புறம்போக்கு—சேரிப் பகுதிகளை ஆக்கிரமிப்பது, ரௌடிகள் முதலான சமூக விரோதிகளுக்கு எதிரானது என்று கூறி ஆறு ஆண்டுகளுக்குமுன் கொண்டு வரப்பட்ட இச்சட்டம் கேலிக்குரியதாகிவிட்டது. ஆளும் கட்சிக்காரர்களே புறம்போக்கு ஆக்கிரமிப்பாளர்களாகவும், கள்ளச்சாராய வியாபாரிகளாகவும். மாறி கொள்ளையடிக்கின்றனர். இன்று இச்சட்டம் விரிவுபடுத்தப்பட்டு காடுகளில் கள்ளத்தனமாக மரம் வெட்டுவோர், வனவிலங்குகளைக் கொல்வோர்மீதும் ஏவப்படுமாம். சமூக விரோதிகள்மீது அல்ல; சாமானியர்மீது பாய்வதற்கே இச்சட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அனுமதி பெறாத சினிமாவை 'வீடியோ'வில் காட்டினால் இரண்டாண்டு சிறைத் தண்டனை என்ற புதிய சட்டம் சினிமா அதிபர்களிடம் கையூட்டு பெற்றுக் கொண்டு இயற்றப்பட்டுள்ளது. இத்தகைய குற்றங்களுக்கு கைது செய்ய உதவிக் கமிஷனருக்கு மட்டுமே இருந்த அதிகாரம் இப்போது சாதாரண இன்ஸ்பெக்டர் மட்டம் வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்களின் நன்மைக்கானது, முற்போக்கானது,நியாயமானது என்கிற பெயரில் அரசும் அதிகாரிகளும், போலீசும் வரம்பற்ற அதிகாரத்தை குவித்துக் கொள்வதுதான் இச்சட்டங்களின் நோக்கம். இதுவும் போதாது என்று பிரதமரின் போலீசு பதக்கமும், ஐ.ஜி. பதவி உயர்வும் பெற்ற எம்ஜிஆரின் விசுவாசி, கமிஷனர் தேவாரம் தன் பங்குக்கு தினம் தினம் புதுப்புது தண்டனைச் சட்டங்களை அவிழ்த்துவிடுகிறார்.

நாடாளுமன்ற ஜனநாயக முறைகளின் மூலமாகவே, சட்டபூர்வமாகவே பாசிச ஆட்சியை நிறுவுவதில் ராஜீவ் கும்பலுக்குப் போட்டியாகவும், ஏன், பலமாநில அரசுகளுக்கு முன்னோடியாகவும்கூட செயல்படுகிறது எம்ஜிஆர் அரசு. சட்ட மசோதாக்களின் நகல்கள் திடீரென சுற்றுக்கு விடப்பட்டு அவசரமாக அரக்கத்தனமாக நிறைவேற்றப்படுகின்றன. அதே சமயம் ஈழப் பிரச்சினையை விவாதிக்க எதிர்க்கட்சிகள் பலமுறை முயற்சித்தும் சர்வாதிகார சபாநாயகர் அனுமதிக்கவில்லை சாதாரண பிரச்சினைகளுக்காக கேள்வி எழுப்புவதுகூட, சபை விதிகளை மீறியதாக மறுக்கப்பட்டு, மீறிப் பேசுவோர் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படுகின்றனர்.

சட்டமன்றமாகட்டும், பாராளுமன்றமாகட்டும் பாசிச கும்பல்கள்ஒரே மாதிரியாகத்தான் நடக்கின்றன. மக்கள் நலனுக்கானது, அவர்களுக்கு எதிராக இச்சட்டம் ஏவப்படமாட்டாது என்று கூறிக் கொண்டே படிப்படியாக பாசிசத்தை சட்டபூர்வமாகவே அரங்கேற்றி வருகின்றன. அப்பட்டமாக பாசிசம் அரங்கேறும் வரை காத்திராமல், அதன் வெளிப்பாடுகளையும் பாசிச கும்பலின் எத்து வேலைகளையும் விழிப்போடிருந்து எதிர்த்து முறியடிக்க வேண்டும். ●

படிப்பகம்

www.padippakam.com

# நடப்பது நாடாளுமன்ற ஆட்சி அல்ல


# பல குடும்பங்களின் ஆட்சி

நாட்டின் எந்த மூலைக்கும் போய்ப் பாருங்கள். ஓட்டுக் கட்சிகள் நடத்தும் அரசியல் வியாபாரம் தான் எங்கும் லாபகரமானதாக இருக்கிறது. நட்டமே இல்லாத தொழில். இந்தொழிலில்தான். நட்டம் ஏற்பட்டு நொடித்துப் போனவர்களை நீங்கள் எங்கேயும் பார்க்க முடியாது. ஏனெனில் மூலதனமே போடாமல் நடத்தப்படும் தொழில். மூலதனமே போடாத, நட்டமே இல்லாத வேறு தொழில்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனாலும் ஓட்டுக்கட்சி அரசியல் அளவுக்கு அவை லாபகரமானவையென்று சொல்ல முடியாது. இதைத் தெரிந்து கொண்ட நமது நாட்டு அரசியல் தலைவர்கள் இந்தத் தொழிலை ஒரு குடும்பத் தொழிலாக, குலத் தொழிலாக—அதாவது சாதித் தொழிலாக வளர்த்து விட்டார்கள்.

அதாவது விவசாயம் மற்றும் கைத்தறி, பட்டறைத் தொழில் போன்ற கைத்தொழில் செய்பவர்கள் தமது குடும்பத்தையே அவற்றில் ஈடுபடுத்துவது போல, தனது குடும்ப சந்ததியினரையே வாரிசுகளாக்குவது போல, அவையும் ஒவ்வொரு சாதிக்குரிய தொழிலாக இருப்பது போல ஓட்டுக்கட்சி அரசியலை மாற்றிவிட்டார்கள். நவீன ஆலை உற்பத்தி பெருகப் பெருக குடும்ப மற்றும் குலத் தொழில்கள் மறையலாம்; ஆனால் இந்தத் தொழிலோ மேலும் விரிவாக உறுதியாகி வருகிறது. சினிமா, வியாபாரம், வக்கீல், பத்திரிக்கை, காண்டிராக்ட் வேலை போன்றவை இந்தத் தொழிலின் துணைத் தொழிலாக மாறியிருப்பதால் நமது நாட்டு அரசியல் தலைவர்கள் அவற்றிலும் தமது குடும்பத்தினரை, சாதியினரைத் திணிப்பதில் தவறவில்லை. ஆனாலும் ஓட்டுக் கட்சி அரசியலே பிரதானத் தொழிலாக அவர்கள் கருதி வளர்க்கிறார்கள். ஆளும் கட்சி—எதிர்க்கட்சி, அல்லது தேசியக் கட்சி—பிராந்தியக் கட்சி, அல்லது 'முற்போக்குக்' கட்சி—பிற்போக்குக்கட்சி, அல்லது ஜனநாயக கட்சி—சர்வாதிகாரக் கட்சி என்று இந்தத் தொழில் நடத்துவதில் மட்டும் வேறுபாடு கிடையாது. சாதி, இனம், மதம், மொழி ஆகிய வேறுபாடுகளைக் கடந்த ஒரு தேசிய ஒற்றுமையை அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

தென்கோடியிலுள்ள கருணாநிதி—வடகோடியிலுள்ள ஃபருக் அப்துல்லா, மேற்குக் கோடியிலுள்ள தேவிலால், பஜன்லால், பான்சிலால்—கிழக்குக் கோடியிலுள்ள நாகலாந்து தாதார் தாங் மற்றும் துங்கோன் குடும்பங்கள். தென்மேற்கே மகாராஷ்டிராவில் சவாண் மற்றும் வசந்த் தாதா பாடீல், வடமேற்கே சிக்கிமில் பண்டாரி, ஒரிசாவில் பட்நாயக், தென்கிழக்கே ஆந்திராவில் ராமராவ், வடமேற்கே பஞ்சாபில் பர்னாலா மற்றும் அருண் சிங்—சஞ்சய்சிங்—வி. பி. சிங் குடும்பங்கள்—இப்படி நாட்டின் எட்டுத் திக்குகளிலும் ஓட்டுக் கட்சி அரசியல் தொழில் குடும்பத் தொழிலாகவும், குலத் தொழிலாகவும் செழித்து வளர்கிறது.

இந்தத் தொழிலுக்கு வருவதற்கு முன்பு ஏதாவது பொருளை உற்பத்தி செய்தோ விற்றோ லாபம் சம்பாதித்தார்கள். இந்தத் தொழிலுக்கு வந்த பிறகு அம்மாதிரியான உற்பத்தி அல்லது வியாபாரத்துக்கும் போகிறார்கள். ஆனால் இந்தத் தொழிலில் உற்பத்தியும், வியாபாரமும் கிடையாது. அதிகாரத் தரகுதான் ஓட்டுக் கட்சி அரசியல் தொழிலின் மும்முரமான நடவடிக்கை. தொழில் லைசென்சு, பர்மிட், கோட்டா, தொழில் கடன், காண்டிராக்ட், ஒப்பந்தம், அரசுக்குத் தேவையான சரக்குகளை கொள்முதல் செய்வதும், அரசுப் பொருட்களை விற்பனை—விநியோகம் செய்வதும் ஆகிய அதிகாரங்கள் பதவியிலுள்ளவர்களிடம் இருக்கிறது. தொழில்முறை முதலாளிகள், வியாபாரிகளுக்கு இவற்றைப் பெற்றுத் தருவதுதான் அதிகாரத் தரகு வேலையின் மையமான நடவடிக்கை. எதிர்க்கட்சியிலுள்ளவர்களுக்கு நேரடி அதிகாரம் இல்லையானாலும், தொழில்முறை அங்கீகாரம் காரணமாக பதவியிலுள்ளவர்கள் அவர்களும் தொழில் நடத்துவதற்கு வசதி செய்து கொடுக்கிறார்கள். இது தொழில் ரகசியம் அல்லது தொழில் தர்மம்—நெறி.



ஜனநாயகம் பேசும் கருணாநிதி தமது மகன்களை அரசியல் வாரிசாக்குவதற்குத் தொடர்ந்து முயலுகிறார்.

அதிகாரத் தரகுதான் ஓட்டுக் கட்சி அரசியல் தொழிலின் மையமான நடவடிக்கை என்பதால் லஞ்ச—ஊழல், அதிகார முறைகேடுகளையும் எழுதப்படாதநியாய உரிமைகளாக நமது நாட்டுத் தலைவர்கள் கோருகிறார்கள். 'எந்த நாட்டில் எந்தக் காலத்தில் இவை நடக்கவில்லை', 'லஞ்ச—ஊழல் இருக்கத்தான் செய்யும், தவிர்க்க முடியாது', 'தேனை அழித்தவன் புறங்கையை நக்குவான்' என்பது போன்ற கருத்துக்களைப் பரப்புகிறார்கள், ஒருவருக்கொருவர் கண்டு கொள்ளாமல் இருப்பதும், அதிகாரத் தரகு வேலைக்காக—லஞ்ச ஊழல், அதிகாரமுறைகேடுகளுக்காக இதுவரை யாருமே தண்டிக்கப்பட்டதில்லை. இவற்றைக் குற்றமாகக் கருதி தண்டிப்பார்கள் அல்லது இழிவாகக் கருதி ஒதுக்குவார்கள் என்கிற அச்சம் அவர்களுக்குக் கிடையாது. எனவேதான் பெருமைக்குரிய குடும்பத் தொழிலாக, குலத் தொழிலாக அதிகாரத் தரகு வேலையை— ஓட்டுக் கட்சி அரசியல் வேலையை மேற்கொண்டுள்ளனர்.

ஆட்சி உரிமையை ஒரு வாரிசுச் சொத்தாக நேரு—இந்திரா—ராஜீவ் குடும்பத்தினர் வரித்துக் கொண்டார்கள் என்பது உலகமறிந்த செய்தி. சட்டம் படித்த மேதைகளான மோதிலால் நேருவும் ஜவகர்லால் நேருவும் சுதந்திரப் போராட்டத்திற்கு தியாகம் செய்தவர்கள்— சொத்துக்களையெல்லாம் தேசத்துக்கு ஈந்தவர்கள்; ஆதாயம் பார்த்து அரசியலுக்கு வராத கோமான்கள் என்று திட்டமிட்டுப் பிரச்சாரம் செய்யப்படுகிறது. ஆனால் டாடாபிர்லாவுக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கும் தரகு



படிப்பகம்

www.padippakam.com

வேலை பார்ப்பதுதான் அவர்களது அரசியல் தொழிலாக இருந்தது. ஓட்டுக்கட்சி அரசியலை குடும்பத் தொழிலாக, குல—சாதித் தொழிலாகத் தொடங்கி வைத்த பெருமை பண்டிதர் நேருவுக்கே உண்டு.

தங்கை விஜயலட்சுமியையும் மகள் இந்திராவையும், மருமகன் ஃபிரோஸ் காந்தியையும் முதலில் நுழைத்தார். இந்திராவை தனது வாரிசாக நியமித்து, கட்சித் தலைமையில் திணித்தார். நேருவின் ஜனநாயகத்தைப் பற்றிப் பீற்றிக் கொள்ளுபவர்கள்கூட இதை ஏற்றுக் கொள்ளுவர். இந்திராவோ **தனது மகன்களான** சஞ்சய், ராஜீவை அடுத்தடுத்து இந்தத் தொழிலுக்கு அதிபதிகளாக்கினார். தொழில் கூட்டாளிகளாகத் தனது குடும்பத்தைச் சேர்ந்த ஷீலா கௌல், அருண்நேரு போன்றவர்களை சேர்த்துக் கொண்டார். இந்தத் தொழிலின் நம்பகமான ஊழியர்களாக டி.பி.தார், பி.என். அக்சர், பி.கே. நேரு, ஆர்.கே. நேரு, கே. என் காவோ எல் கே. ஜா, டி.என். கௌல், பி.என் கௌல் போன்ற காஷ்மீரப் பார்ப்பனர்களைத் தெரிந்தெடுத்துக் கொண்டார்.

என்ன முயன்றாலும் இவ்வளவு பெரிய அரசு எந்திரத்திற்கு தனது குடும்பத்தினரை சாதியினரை மட்டும்—அதுவும் மிகமிகச் சிறிய பிரிவு—கொண்டு நிரப்ப முடியுமா? மொழி, இன வேறுபாடு இருந்தாலும் ஒரு சாதிக்காரர்கள்தானே என்று வெங்கடராமன், குண்டுராவ், பி.வி. நரசிம்மராவ், சுக்ளா, திரிபாதி, பிரணவ முகர்ஜி, மிஸ்ரா, பாண்டே, திவாரி, பார்த்தசாரதி, போன்ற பார்ப்பண சாதியினராகப் பார்த்து எல்லா மாநிலங்களிலிருந்தும் தேடிக் கொண்டார். இவர்கள் தவிர மிகவும் விசுவாசிகளான மற்ற சாதிக்காரர்களைப் பொறுக்கி எடுத்தார். எவ்வளவு பெரிய அரசு எந்திரமானாலும் நேரு குடும்பமும், காஷ்மீரப் பார்ப்பனர்களுமே அதன் சூட்சுமதாரிகளாக இருக்கின்றனர்.

இது விவரம் புரிந்த பலருக்கும் பழைய கதை. ஏதோ திராவிடர் கழகத்தவர்போல எங்கள்சாதிக்கும் அதிகாரத்தில் பங்கு கொடு என்கிற அதிகாரப் போட்டிக்கான பட்டியல் தரும் நோக்கத்தில் இதைச் சொல்லவில்லை. ஓட்டுக்கட்சி அரசியல் தொழில் எந்த அளவு குடும்ப, குல—சாதித் தொழிலாலாக மாறி விட்டது என்பதைக் குறிப்பிடவே சொல்லப்படுகிறது நேரு குடும்பத்து—குல—சாதி வரம்போடு இந்தத் தொழில் நின்று விடவில்லை; எல்லா மாநிலங்களிலும் பிரபலமாக செழித்து வளரும் தொழிலாகிவிட்டது என்பதற்காகவே இதைச் சொல்லுகிறோம்.

நடப்பிலுள்ள எட்டாவது நாடாளுமன்றத்தின் சேர்க்கை பற்றி டெல்லி நேரு (!) பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் சி.பி. பாம்பிரியும் பி எஸ். வர்மாவும் ஒரு ஆய்வு நடத்தினார்கள். அதன்படி 40 சதவிகித எம்.பி.கள்பிரபலமான அரசியல் குடும்பங்களின் வாரிசுகளாக அவரவர் தொகுதிகளில் இருந்து வந்துள்ளனர். "சில மத்திய மந்திரிகள், முதல் மந்திரிகள், எம்பிகள் எம்எல்ஏக்கள், சுதந்திரப் போராட்டத் தியாகிகள், பழைய நிலப்பிரபுத்துவ குடும்பத்தினர் போன்றவர்களின் இரத்தஉறவினர்களே இதில் பெரும் பகுதியினர்" என்ற உண்மையை அவர்கள் புட்டு வைக்கின்றனர். நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல, மாநிலங்களின் மன்றங்கள், மந்திரி சபைகளிலும் இதே நிலைமைதான் உள்ளது.

## நேரு குடும்பத்தின் நேர்மை அதிகாரத் தரகை ஏகபோகமாக்கிக் கொள்ளவில்லை

நேரு — இந்திரா — ராஜீவ் குடும்பம் முழுக்க முழுக்க சுயநல, சாதிநல கும்பல் என்று குற்றஞ்சாட்டி விட முடியாது. ஏனெனில் ஓட்டுக்கட்சி அரசியல் தொழிலை, அதிகாரத் தரகு வியாபாரத்தை ஏகபோகமாக்கிக் கொண்டு வேறுஎவரையும் பிழைக்க விடவில்லை என்று கூறமுடியாது. பண்டிதர் நேருவின் காலத்திலிருந்தே இந்தத் தொழிலை மற்றவர்களும் நடத்துவதற்கு அனுமதித்தார்கள், ஊக்குவித்தார்கள். ஆனால் குடும்ப, குல—சாதித் தொழிலாக வளர்க்க வேண்டும் என்பதில் மட்டும் அக்கறையோடிருந்தார்கள். எனவேதான் 1952முதல் தேர்தலிலேயே காங்கிரசு 'தியாகி'களின் வாரிசுகளுக்கும் பிறகு அவர்களின் அடுத்தடுத்த சந்ததியினருக்கும் இத்தொழில் நடத்த வாய்ப்பளித்தனர்.



ஜனதா மூலம் பதவி சுகம் அனுபவித்த பிறகு மீண்டும் இந்திராவிடமே சரணடைந்தார். ராஜீவிடம் கெஞ்சி தனது மகள்மீரா குமாருக்கு எம்.பி பதவி பெற்றார், ஜெகஜீவன்

பெரும் தரகு முதலாளிகளையும், பெரும் நிலப்பிரபுக்களையும், பெரும் வியாபாரிகளையும் மட்டுமல்ல, காங்கிரசு கும்பலின் குடும்ப வாரிசுகள் யார்யார் நேரு—இந்திரா—ராஜீவ் ஆட்சியில் பதவியளிக்கப்பட்டனர் என்கிற விவரங்களை விரிவாக ஏற்கனவே புதிய ஜனநாயகம் வெளியிட்டிருக்கிறது. மத்திய—மாநில மந்திரிகளாகவும், எம்பிக்கள், எம்எல்ஏகளாகவும் இன்றுள்ளவர்களில் பாதிப் பேருக்கு மேல் ஏற்கனவே அதிகாரத் தரகர்களாக இருந்தவர்கள்—இருப்பவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

நேரு குடும்பத்தின் இந்தத்தயாள சிந்தனையைப் பயன் படுத்திக் கொண்ட காங்கிரசுத் தலைவர்கள் பலரும் அந்தந்த மாநிலங்களில் தமது குடும்ப, குல—சாதித் தொழிலாக அரசியலை மாற்றிக் கொள்வதில் கவனஞ்செலுத்தினர். அப்புறம் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் இந்த தொழிலில் நல்ல ஈடுபாடும் கவர்ச்சியும் ஏற்பட்டது. அதன் விளைவாக இன்று ஒவ்வொரு மாநிலத்திலும் நிலப்பிரபுத்துவ காலத்தைப் போன்ற குடும்ப, குல—சாதி ஆட்சி நிலைநாட்டப்பட்டு வருகிறது. ஒரிசாவில் ஜே.பி. பட்நாயக், காஷ்மீரில் ஃபரூக் அப்துல்லா, அரியானாவில் தேவிலால், உ.பி யில் திரிபாதி, ஆந்திராவில் ராமராவ் போன்று மொத்தத்தில் ஒருசில குடும்பங்களின் பிடியில்தான் உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் ஆட்சி சிக்கியிருக்கிறது.

## பட்நாயக்கும் ஃபரூக்கும்

காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைக்குப் போராடுவதாகவும், அதற்காக பல ஆண்டுகள் தியாகம் செய்ததாகவும், "காஷ்மீரின் சிங்கம்" என்று நிகரில்லா ஆதரவு பெற்றவராகவும் சொல்லப்பட்ட ஷேக் அப்துல்லா தனக்கு வாரிசு ஆட்சிப் பேராசை இருப்பதாகக் கடைசி நாட்கள்வரை காட்டிக் கொள்ளவில்லை. நாடாளுமன்ற உறுப்பினராக்கப்பட்ட போதும் அவரது மகன் ஃபரூக் அப்துல்லா அரசியலில் அக்கறை இல்லாதவராகவும் மருத்துவத் தொழிலிலேயே ஆர்வமுள்ளவராகவும் நடித்தார். ஆனால் சாவதற்கு ஓராண்டிருக்க திடீரென்று மற்ற பிற மூதிய தலைவர்களை ஒதுக்கிவிட்டு தனது மகனையே தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவராக்கினார் ஷேக் அப்துல்லா.

ஷேக் அப்துல்லாவின் மனைவி பேகம் அக்பர் ஜகான் கணவனுக்



படிப்பகம்

குப் பின்னாலிருந்து அதிகாரம் செலுத்தி வந்தார். சமூக சேவகியாக சொல்லிக் கொண்டு பொது வாழ்வில் நுழைந்தவர் 1977 இல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார். ஏற்கனவே காஷ்மீர் மந்திரியாக ஷேக் அப்துல்லாவின் மருமகன் ஜி எம்.ஷா இருந்தார். அவரது மனைவி கட்சியில் முக்கிய பங்கு வகித்தார். ஷேக் அப்துல்லா இறந்த பிறகு வாரிசுப் போட்டி நடந்தது. தாய் பேகம் அக்பர் ஜகானின் ஆதரவுடன் ஃபரூக் ஆட்சியைப் பிடித்தார்—நேரடி வாரிசுக்கே ஆட்சி உரிமை என்றானது. மருமகனோ கட்சியைப் பிளந்தார். காங்கிரசுடன் கூட்டணி சேர்ந்து முதன் மந்திரியானார்; அவரது மனைவி கட்சித் தலைவியானார். பிறகு காங்கிரசு ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தி ஃபரூக்குடன் சேர்ந்து கொண்டு மந்திரி சபை அமைத்துள்ளது' ஃபரூக்கின் சகோதரரும் அரசியலில் குதித்து அண்ணனுடன் சேர்ந்து தொழில் நடத்த வந்துவிட்டார்.

ஆக சிறப்பான, கூடுதலான அதிகாரங்களுடன் அப்துல்லா குடும்பமே மாறிமாறி ஆட்சியிலிருக்கிறது. ஆளும்கட்சி, எதிர்க்கட்சி இரண்டு நிலையிலும் இருந்து அதிகாரத் தரகுத் தொழில் நடத்துகிறது. குடும்ப ஆட்சியை நிலைநாட்டுவதற்காக ஷேக் அப்துல்லாவின் விசுவாச ஊழியர்கள் தூக்கியெறியப்பட்டனர். இப்போது காஷ்மீரின் உரிமையை நிர்ணயிப்பது ஷேக் அப்துல்லா குடும்பமாகி இருக்கிறது. காங்கிரசும் இப்படிப் பட்ட நிலையையே விரும்புகிறது.

லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகளுக்கும், ஆபாச வக்கிர வாழ்வுக்கும் இலக்கணம் வகுத்தவர் ஒரிசா முதல்வர் ஜானகிவல்லப பட்நாயக். இன்று ஒரிசா மாநிலமே அவரது உறவினர்களின் உடும்புப் பிடியில் சிக்கியிருக்கிறது. பட்நாயக்கின் மனைவி ஜெயந்தி பட்நாயக் ஒரு எம்.பி. ஆனால் ஒரு மாநில மந்திரிக்குரிய அதிகாரத்துடன் ஆட்சி நடத்துகிறார். பட்நாயக்கின், மருமகன் சௌமியா ரஞ்சன் பட்நாயக். ஒரிசாவின் தொழில் மந்திரி, மந்திரியாகும்முன் ஒரிசாவிலேயே பெரிய பத்திரிகைச் சங்கிலியின் அதிபதியாக்கப்பட்டார். மருமகனின் அண்ணன் நிரஞ்சன் பட்நாயக் மாநிலத்திலேயே அதிக வருவாயுடைய நீர்பாசன மற்றும் எரிசக்தி மந்திரி. மந்திரியாவதற்கு முன்பு இவர்கள் இருவரும் சேர்ந்து அரசுக்கு இரும்புத்தாது விற்கும் சுரங்கத் தொழில் செய்து கொழுத்தனர். நந்தினிசத்பதியின் ஆதரவாளராயிருந்து, 1977 தேர்தலில் தோற்றுப் போன நிரஞ்சன் தனது தம்பி முதல்வரின் மருமகனான பிறகு அமைச்சரானார். அதன் பிறகுதான் எம்.எல் ஏ ஆனார்.

நிரஞ்சன் பட்நாயக்கின் மைத்துனர் [illegible] இல் ஒரிசா சுரங்கங்களின் இயக்குநராக்கப்பட்டார். சுரங்க ஏல விவகாரங்கள் பலவற்றில் அதிகாரமுறைகேடு செய்ததாக மொஹந்திமீது இலாகா குற்றச்சாட்டே உள்ளது. நிரஞ்சன் பட்நாயக்கின் ஒன்றுவிட்ட சகோதரன் திரேன் பட்நாயக் ஒரிசா கடல் வழி மற்றும் சில்காபகுதி வளர்ச்சி வாரியத் தலைவரான இவர் 1980 தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றுப் போனார்.



தனது குடும்ப ஆட்சியை நிலைநரட்டுவதில் ராமராவையும் விஞ்சிவிட்டார் தேவிலால். மாநிலத்தின் நிர்வாகத்திலும் தனது கட்சியிலுமாக ஏறக்குறைய 150 உறவினர்களை அதிகாரத்தில் வைத்து விட்டார். நாலே மாதங்களில்

முதல்வர் ஜே.பி. பட்நாயக்கின் மனைவி ஜெயந்தியின் உறவினர் மேஜர் எச். மஹபத்ரா. ஒரிசா சுரங்கம் மற்றும் சில்கா பகுதி வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநராக இராணுவத்திலிருந்து அனுமதி பெற்று வந்துள்ளனர். ஜெயந்தியின்இன்னொரு உறவினர் திலிப் மஹபத்ரா மூதிய அதிகாரிகளையும் தாண்டி பதவி உயர்வு பெற்று மாநில இரகசிய உளவுத் துறை போலீசின் துணை ஐ.ஜிஆக்கப்பட்டுள்ளார். மரங்களைக்கடத்தும் வழக்கில் தண்டனையாக அபராதம் கட்டிய குற்றவாளி.

முதல்வர்பட்நாயக்கின் குடும்ப உறுப்பினர் அளவுக்கு நெருக்கமாக இருந்தவரும், 'அதிஉயர் முதல்வர்' என்கிற அளவு அதிகாரம் பெற்றிருந்தவருமான பசந்த்குமார் பிஸ்வால் இப்போது பிரிந்து தனியே உள்ளார். பிஸ்வாலின் மைத்துனர் பாரிதா ஒரிசாவின் மருத்துவக் கல்வி மற்றும் பயிற்சி இயக்குநராக்கப்பட்டார்; பாரிதாவின் சகோதரியை மணந்த நரஹரி பட்நாயக் ஒரிசா வீட்டு வசதி வாரியத் தலைமை அதிகாரி; பிஸ்வாலின் சகோதரர் மேந்திரகுமார் ரௌதின் மைத்துனர் மனீந்த்ர ரௌத் ஒரிசாவின் சுற்றுச் சூழல் மாசுபடுவதைத் தடுக்கும் கட்டுப்படுத்தும் வாரியத் தலைவர்; மற்றொரு மைத்துனர் சேனாதிபதி வீட்டு வசதி வாரியத் தலைவர்; இன்னுமொரு மைத்துனர் ஆர்.என். தாஸ் போலீஸ்துறை செயலாளர்—அதே சமயம் ஒரிசா சுரங்கக் கழகத் தலைவர். இவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பதவிகள் விதிமுறைகளை மீறியும், ஓய்வு பெற்ற பிறகும் தரப்பட்டவை.

மக்கள் பட்டினியால் சாகும் ஒரிசாவின் அதிகாரத்தை இந்தஇரு குடும்பங்களும் ஏகபோகமாக்கிக் கொண்டுள்ளன. திருவாளர் பரிசுத்தத்தின் முழு ஆசிபெற்ற இந்த லஞ்ச ஊழல் பேர்வழிகளின் கீழ் தான் ஒரிசா உள்ளது.

## ராமராவும் தேவிலாலும்

நேரு—இந்திரா—ராஜீவ் குடும்பத்தின் வாரிசு ஆட்சி முறையை எதிர்த்தும், ஜனநாயகத்துக்காகவும் போராடும் எதிர்க் கட்சிகளின் முக்கியத் தலைவர்கள் ஆந்திரா ராமராவும் அரியானா தேவிலாலும் வாரிசு ஆட்சிமுறைக்கும், அதிகாரத் தரகுத் தொழிலுக்கும் எதிர்க் கட்சிகளும் அப்பாற்பட்டவைஅல்ல என்பதை நிரூபிப்பதற்கான சான்றுகளாக இவர்கள் திகழ்கிறார்கள்.

ஜனநாயக பூர்வமாக முதல்வர்களையும் மந்திரிகளையும் தேர்ந்தெடுக்க அனுமதிக்காது டெல்லியிருந்து அவர்களைத் திணித்து தெலுங்கு தேச மக்களை இந்திரா அவமானப்படுத்தி விட்டதாகச் சொல்லி ஆட்சிக்கு வந்தவர் ராம



www.padippakam.com
படிப்பகம்

ராவ். இப்போது தெலுங்கு தேச மக்கள்மீது தனது குடும்பஆதிக்கத் தைத்தான் அவர் நிறுவியுள்ளார். ராமராவின் மருமகன் சந்திரபாபு நாயுடு. கட்சியின் பொதுச் செய லாளராகவும் ராமராவுக்கு அடுத்த இடத்திலும் இருப்பவர். இவர்மீது பல ஆதாரபூர்வமான ஊழல்குற்றச் சாட்டுக்களை வைத்ததற்காக வரு வாய்த்துறை மந்திரி சீனிவாசுலு ரெட்டி நீக்கப்பட்டார்.

ராமராவின் மற்றொரு மரு மகனான டாக்டர் டி. வெங்கடேஸ் வரராவ் இப்போது மந்திரியாக்கப் பட்டிருக்கிறார். மூத்த மருமகனான கணேஷராவ் தனது சகோதரர் ஜி. சாம்பசிவராவை எம்.எல்.ஏ ஆக்கிவிட்டார். கோடிக் கணக்கில் லஞ்ச ஊழல் அதிகார முறை கேடு களினால் திரட்டியுள்ள ராமராவ் தனது மகன்களான ஜெயகிருஷ்ணா பாலகிருஷ்ணா இருவரையும் நடிகர் களாகவும் ஆந்திர சினிமாமுதலாளி களாகவும் வளர்த்துள்ளார். இதிலே பாலகிருஷ்ணாவைத் தனது அரசி யல்வாரிசாக உருவாக்கி வருகிறார். தனது மகன்கள் மருமகன்களுக்கு எதிராக எவர் குறைசொன்னாலும் கட்சியில் இருக்க முடியாது என்று இந்திரா-சஞ்சய் மற்றும் ராஜீவைத் தனது வாரிசாகத் திணித்ததையும் விஞ்சிவிடும் அள வுக்கு அப்பட்டமான பாசிச நடை முறையைக் கைக்கொண்டுள் ளார்.

ராஜீவ் கும்பலின் லஞ்ச ஊழல், ஜனநாயக விரோத நட வடிக்கைகள், வாரிசு ஆட்சி உரிமை ஆகியவற்றை எதிர்த்துப் போராடும் போலிக் கம்யூனிஸ்டுகள் உட்பட எந்த எதிர்க்கட்சியும் ராமராவின் அதே போக்குகளை எதிர்ப்பதில்லை. மாறாக ராம ராவ் போடும் நாற்காலி பதவிப் பிச்சைக்காக அவை தவம் கிடக் கின்றன.

ஆட்சிக்கு வந்த நாலே மாதங் களில் தனது குடும்ப ஆட்சியை நிலைநாட்டுவதில் ராமராவையும் விஞ்சிவிட்டார் தேவிலால். மாநிலத் தின் நிர்வாகத்திலும் தனது கட்சி யிலுமாக ஏறக்குறைய 150 உற வினர்களை அதிகாரத்தில் வைத்து விட்டார். தேவிலாலின் மூத்தமகன் ஓம்பிரகாஷ் சௌதாலா கடத்தல் வழக்கிலே சிக்கி இனியும் தனது மகனல்ல என்று எட்டு ஆண்டு களுக்கு முன் தேவிலால் அறிவித்த வர், இப்போது ஆளும் லோக்தளக் கட்சியின் மாநிலத் தலைவர், எம்.எல்.ஏ, தேவிலாலுக்குப்பின்னா லிருந்து மாநிலத்தை ஆளுபவர். இரண்டாவது மகன் இது வரை காங்கிரஸ் எம்எல்ஏ. தேர்தல் சீட்டுக் கிடைக்காததால் லோக்தளத்தில் சேர்ந்து எம்எல்ஏ ஆனார். இப் போது மாநில சிறு அளவு குடிசைத் தொழில்கள் கழகத்தின் தலைவர்.

www.padippakam.com

மூன்றாவது மகன் ரஞ்சித் சிங் இன்னுமொரு எம்எல்ஏ.

தேவிலால் குடும்பத்துக்கு வெளியே அவரது பங்காளி கமல் வீர் சிங் முதல்வரின் சிறப்பு அதி காரி; அவரது மருமகன் ஆத்மாஜீத் சிங் நெஹ்ரா அரியானாவின் (அடவ கேட் ஜெனரல்) அரசின் தலைமை வழக்கறிஞர்; தேவிலாலின் மரு மகளை மணந்த எம்.எஸ். லாதார் விவசாய விற்பனை வாரியத் தலைவர்; ஓம்பிரகாசின் சம்பந்தி தேக் ராம் வீட்டு வசதி வாரியத் தலைவர்; கல்வி வாரியத் தலைவர் ராஜாராமும், சுற்றுலா வாரியத் தலைவர் மோஹர் சிங்கும் தேவிலா லின் பங்காளிகள். இப்படி நீளமான பட்டியலில் மொத்தம் 150 பேர் நான்கு மாதத்தில் பதவிபெற்றுள்ள னர். அதில் 34 வாரியத் தலைவர் கள் அடங்குவர். 30 பேர் தேவி லாலின் சொந்த ஊர்—சாதிக்காரர் கள். இன்னும் பெயர் தெரியாத 150 பேர் தேவிலாலின் தூரத்து உற வினர்கள்.

"அவர்கள் அனைவரும் தகுதி யானவர்கள், கட்சி மாறிகளைக் கொண்ட மாநிலத்தில் விசுவாச மானவர்களுக்குத்தானே பதவி கொடுக்க முடியும், ஜாட் சாதியில் எப்படிப் பார்த்தாலும் எல்லோரும் உறவினர்கள். பான்சிலால்கூட எனக்கு உறவுக்காரர்தான்" என்று சொல்லுகிறார் தேவிலால். உண்மை என்னவெனில் ராஜீவின் குற்றங்களைச் சொல்லி ஆட்சிக்கு வந்துள்ள தேவிலால் தனது குடும்ப, குல—சாதி ஆட்சியைத் தான் நிறுவியுள்ளார். இதைத் தட்டிக் கேட்க போலிக்கம்யூனிஸ்டு கள் உட்பட எதிர்க்கட்சிகளுக்கு துணிச்சலில்லை. ஆந்திராவில் ராமராவைநம்பியிருப்பதைப் போல அரியானாவில் தேவிலாலை நம் பியே இவர்களின் ஓட்டுப் பொறுக்கும் அரசியல் அமைந்திருக் கிறது.



கமலாபதி திரிபாதிமகன் லோகபதி திரிபாதியை உத்திரப் பிரதேச முதல்வராக்கி விட முயலுகிறார். ஏற் கனவே லோகபதி திரிபாதி உத்திரப் பிரதேச சுகாதார மந்திரி யாக உள்ளார். அவரது மனைவி சந்திரா திரிபாதி எம்.பி.

## பார்ப்பனர்களும் ராஜபுத்திரர்களும்

தேசிய அளவில் அதிகாரத்துக் கான போட்டியில் ஈடுபட்டிருக்கும் இரண்டு முக்கிய சாதிகள் பார்ப் பனர்களும் தாக்கூர்கள் எனப்படும் ராஜபுத்திரர்களும். சிறுபான்மை யினராக உள்ள பார்ப்பனர்கள் அதிகாரத்தை முழுவதுமாகக் கைப்பற்றுவதற்காக நாடு முழுவது மான சாதிக் கூட்டணி அமைக்க முயலுகின்றனர். வடநாட்டில் மற்றும் பெரும்பான்மையான மாநிலங்களில் உள்ள தாக்கூர்கள் பல்வேறு கட்சிகளில் இருந்தாலும் சமயம் வரும்போது ஒன்றுபட்டு ஆட்சியைப் பிடிக்க முயலுகிறார் கள்.

கமலாபதி திரிபாதியைப் பார்ப்பனர்களும், வி.பி சிங்கை ராஜபுத்திரர்களும் தமது தலைவர் களாக வைத்து இந்த அதிகாரப் போட்டியில் ஈடுபட்டுள்ளனர். எனினும் இவ்விருவரும் அதை மறுக் கின்றனர் — மறைக்கின்றனர். கமலாபதி திரிபாதி உத்திரப் பிர தேச அரசியலில் தனது குடும்பத் தின் செல்வாக்கை உறுதி செய்து தனது மகன் லோகபதி திரிபாதியை முதல்வராக்கி விடவும், தேச அளவில் பார்ப்பனர்களின் கூட் டணி உருவாக்கவும் முயலுகிறார். கர்நாடகா குண்டுராவ், மேற்கு வங்க பிரவை முகர்ஜி, மத்திய பிர தேசசுக்லா, பீகாரின்ஜகநாதமிஸ்ரா ஆகியோரைக் கொண்டு ஒரு கும் பலை உருவாக்க முயன்றதில் அவர் கள் தோற்றுப் போனார்கள். இருந் தாலும் நம்பிக்கையைக் கைவிட வில்லை. இந்திரா விசுவாசிகள் என் கிற முத்திரையோடு ராஜீவ் கும்பலின் ஒரு "நிர்பந்தக் குழு வாக" தங்களை உறுதிப்படுத்திக் கொள்ள இப்பொழுது முயலுகிறார் கள்.

அதற்காக வி.பி. சிங்குக்கு எதி ராக உத்திரப் பிரதேச முதல் மந்திரி பதவியைக் கோரி பேரம் பேசுகிறார் லோகபதி திரிபாதி! ஏற் கனவே லோகபதி திரிபாதி உத்திரப் பிரதேச சுகாதார மந்திரி யாக உள்ளார். அவரது மனைவி சந்திரா திரிபாதி எம்.பி. ஆக உள்



படிப்பகம்

www.padippakam.com

ளார். கமலாபதியின் மற்ற மகனும் பேரன்களும் பிற தொழில்களில் ஈடு பட்டிருந்தாலும் காங்கிரசுக் கட்சி யிலும், சாதி அமைப்புகளிலும் செல்வாக்குள்ளவர்கள்.

காங்கிரசு மந்திரியாக உள்ள அர்ஜுன்சிங், எதிர்த் தரப்பிலுள்ள வி.பி.சிங் இருவரும் தாக்கூர்களின் அரசியல் சதுரங்க விளையாட்டில் முக்கிய காய்கள்—ராஜா, ராணி யைப் போல. இவர்களின் குடும்ப உறவினர், உத்திரப் பிரதேசத்தின் செல்வாக்குள்ள மந்திரியாக இருந்து சமீபத்தில் விலகிய சஞ்சய்சிங் இவர்கள் தவிர ராஜஸ்தான் ஜனதாத் தலைவர் கால்வி, பீகார் காங்கிரசு தலைவர் சத்யேந்திர நர்ராயண்சிங் போன்ற தாக்கூர் சாதியினர் எல்லா அரசியல் கட்சி களிலும் தலைவர்களாக உள்ளனர். அந்தந்த மாநிலத்தில் இவர்களு டைய உறவினர்கள் செல்வாக் குள்ளவர்களாக இருக்கின்றனர்.

வெவ்வேறு மாநிலங்களின் உள்ள பார்ப்பனர்களும் ராஜபுத்தி ரர்களும் பிரதமர் பதவியைக் குறி வைத்து செயல்படுகின்றனர். குறைந்தபட்சம் பிற செல்வாக் குள்ள சாதிகளுடன் கூட்டனி அமைத்து அதைக் கைப்பற்றிவிடத் துடிக்கிறார்கள்.

## மற்ற மாநிலங்கள் விதிவிலக்கல்ல

குடும்ப, குல—சாதி அடிப்படை யிலான அரசியல் தொழில் நடத்து பவர்களுக்குச் சில சான்றுகள்தான் மேலே கொடுத்தவை. மற்ற மாநிலங்கள் இதற்கு விதிவிலக் கல்ல. நாகாலாந்து அரசியலில் மூன்று குடும்பங்களே ஆதிக்கம் வகிக்கின்றன. முதல்வர் சீமா, ஆளும் காங்கிரசுத்தலைவர் தாதார் தாஸ் மற்றும் எதிர்க்கட்சித் தலை வர் ஷைலோ குடும்பத்தினர்.

மகாராஷ்டிரா அரசியலில் சர்க்கரை ஆலை முதலாளிகள் ஆதிக்கம் வகித்தாலும் சவாண் சரத்பவார் மற்றும் வசந்த் தாதா பாடீல் ஆகிய மராத்தா குடும்பங் களின் மூலமாகவே அதைச் செய் கின்றனர். ஏற்கனவே அசோக் சவாணையும், பிரகாஷ் பாடீலை யும் எம்பிக்களாகவும் தமது வாரிசு களாகவும் அவர்கள் நியமித்து விட் டனர்.

தமிழ்நாட்டின் எம்.எல்.ஏகளில் பலர் முன்னாள் அரசியல் தலைவர் களின் வாரிசுகள் தாம்.

ஜனநாயகம்பேசும் கருணாநிதி தமது மகன்களை அரசியல் வாரி சாக்குவதற்குத் தொடர்ந்து முயலு கிறார். முரசொலி, குங்குமம், முத் தாரம், வண்ணத்திரை என்று ஒரு பத்திரிக்கைச் சங்கிலியை உரு வாக்கி மருமகனும் 'சம்பந்தியுமான மாறன் மற்றும் மகன் மு.க.அழகிரி பொறுப்பில் விட்டுள்ளார். மகன் மு.க. முத்துவை சினிமா மற்றும் அரசியல் வாரிசாக உருவாக்குவதில் தோற்றுப் போனாலும் மகன் மு.க. ஸ்டாலின் மீது நம்பிக்கை வைத்து கட்சியின்மீது திணித்துள் ளார்.

ராமராவும், தேவிலாலும், கருணாநிதியும் மட்டுமல்ல, ஜெக ஜீவன்ராம், சரண்சிங் போன்ற அவர்களின் முன்னோடிகளும்கூட குடும்ப, குல—சாதி அரசியல் தொழில் நடத்தியவர்கள்தாம். ஜெகஜீவன்ராம் தனது மகன் சுரேஷ்ராமை அரசியல் வாரிசாக்க முயன்றார். ஆனால் சுரேஷ்ராமின் ஆபாசமான வக்கிர வாழ்வு எதிரி களால் அம்பலப்பட்டுப் போன பிறகு அரசியலில் நுழையமுடியாமற் போனார். இந்திராவின் சர்வாதி காரத்தை எதிர்ப்பதாகச் சொல்லி ஜனதா மூலம் பதவி சுகம் அனு பவித்த பிறகு மீண்டும் இந்திரா விடமே சரணடைந்தார். ராஜீவிடம் கெஞ்சி தனது மகள்மீரா குமாருக்கு எம்.பி பதவி பெற்றார். ஜெகஜீவன் ராமின் பேத்தி மேதவி கீர்த்தி எதிர்க்கட்சிகளின் தயவில் அரி யானா எம்.எல்.ஏவானார்.

சரண்சிங்கின் மனைவி காயத்ரி தேவி எம்.பியாகவும் மகள் சரோஜ் சௌதுரி எம் எல்.வாகவும் இருந்தனர். சரண்சிங் சுயநினை விழந்து கிடக்கையில் ஜாட் சாதியின் ஓட்டுக்களைப் பிடிக்க அவரது விசுவாசிகள் சிலர் அவரது மகனை கட்சியின் தலைமையில் திணித்தனர். திடீரென்று கட்சிப் பொதுச் செயலாளராகவும் எம்பி யாகவும் நியமிக்கப்பட்டார். கட்சிக்குள் குழுச்சண்டைவெடித்து பிளவு ஏற்பட்டது கட்சியைப் பிடிக்க சரண்சிங்கின் மனைவியும் மகளும் வேறு முயன்றனர். அதில் தோற்றுப் போன சரோஜ் சௌதுரி தற்கொலை செய்து கொண்டார்.

இப்படி நாடு முழுவதும் ஆளும் கட்சி எதிர்க்கட்சிகள் ஆகிய இரு தரப்பிலும் ஓட்டுக் கட்சி அரசியல் மிகவும் லாபகரமான தொழிலாக வும் குடும்ப, குல—சாதித் தொழி லாகவும் வளர்க்கப்பட்டதற்கு என்ன காரணம்? "சினிமாக் காரர் கள், டாக்டர்கள், எஞ்சினியர்கள், வக்கீல்கள், ஆசிரியர்கள் போன்ற வர்கள் அரசியலுக்கு வருவதைப் போலவே எங்கள் உறவினர்களும் வருகிறார்கள். தகுதி இருக்கிறது, மக்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். அதில் என்ன தவறு?" என்று அவர் கள் கேட்கிறார்கள்.

இது முழுக்க, முழுக்கப் பொய்; தகுதியும், திறமையும் இருப்பின் முறையான வழிகளிலே நுழைந்து தலைமைக்கு வரலாமே! அப்போது யாரும் குறை சொல்லமாட்டார்கள். ஆனால் இவர்கள் அனைவரும் ஏற்கனவே அந்தந்தக் கட்சி ஊழியர்களின் உழைப்பை அல் லது அரசு எந்திரத்தின் பலத் தைக் கொண்டு, சஞ்சய், ராஜீவ், அஜித்சிங் போன்று திணிக்கப்பட் டனர். எனவேதான் திடீரென்று தலைமைப் பதவியில் வந்து குதிக் கிறார்கள். குறிப்பிட்ட சாதிஅல்லது பரம்பரையின்மீது மக்களுக்கு இருக் கும் நிலப்பிரபுத்துவ விசுவாசத்தை பயன்படுத்திக் கொண்டு இதைச் சாதிக்கிறார்கள்.

ஓட்டுக்கட்சி அரசியலின் ஓட்டாண்டித்தனத்தைத்தான் இது குறிக்கிறது. ஒரு அரசியல்— பொருளாதாரத் திட்டமோ பயிற்று விக்கப்பட்ட ஊழியர்களோ அதன் அடிப்படையான மக்கள் இயக்க மோ, இல்லாது கவர்ச்சி முழக்கங் கள், சாதி, மத, இன, தேசிய வெறியூட்டப்பட்ட அரசியல் அடிப் படையில் இந்த அரசியல் உள்ளது. ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய அரசியல், நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஜனநாயக அரசியல் ஆகியவற்றில் மட்டுமே இதற்கு ஒரு மாற்றைக் காண முடியும். ஓட்டுக் கட்சி அரசியல் அடிப்படையிலான நாடாளுமன்ற ஜனநாயகமும், உண்மை அதிகாரத்தில் அதிகார வர்க்கம், போலீசு, இராணுவம், வழக்குமன்றம் போன்ற நிரந்தர அடக்குமுறை அரசு எந்திரமும் தான் தற்போது ஆட்சியில் உள் ளன. இவற்றுக்கு மாற்றாக உழைக் கும் மக்களின் கமிட்டிகளிடம் முழு அதிகாரமும் ஒப்படைக்கப்படும் பொழுது அரசியல் அவர்களுக்குச் சேவை செய்வதாக மாறும்—அப் புறம் அது ஒரு தொழிலாகக் கருதி போட்டியிடுவதற்கு ஒன்றுமில்லா மல் போகும். மக்கள் தமக்குத் தாமே, தம்மையே நிர்வகித்துக் கொள்ளும் அமைப்பாக இருக்கும்.

● மாணிக்கவாசகம்



சரண்சிங்கின் மனைவி காயத்ரி தேவி எம்.பியாகவும் மகள் சரோஜ் சௌதுரி எம் எல்.வாகவும் இருந்தனர். சரண்சிங் சுயநினை விழந்து கிடக்கையில் அவரது மகனை கட்சியின் தலைமையில் திணித்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

# அடக்குமுறையின்பிடியில்...

ஆளும் கும்பல்கள் தமது ஆட்சிக்கு நெருக்கடி ஏற்படும் போதெல்லாம் 'தேசத்தின் நலன்' கருதி நடவடிக்கைகள் எடுப்பதாக அடக்குமுறைச் சட்டங்களைக் கட்டவிழ்த்து விடுவது வழக்கம். பாசிச இந்திரா அவசர நிலையை அறிவித்து பாசிசத்தை அரங்கேற்றியபோது என்னவெல்லாம் கூறி ஏய்த்தாரோ அது போலவே மலேசியாவில் ஆளும் மகாதிர் கும்பல் ஆட்டம் போடுகிறது.

மலேசியாவின் பாசிசப் பிரதமர் மகாதிர் கடந்த அக்-27ந் தேதியன்று உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தை ஏவி நூற்றுக்கணக்கான எதிர்கட்சி முன்னணித் தலைவர்களைச் சிறையிலடைத்தார். இதோடு கம்யூனிச ஆதரவு வெகுஜன இயக்கத் தலைவர்கள், புத்திஜீவிகள், கட்சி சார்பற்ற மக்கள் திரள் இயக்கத் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். இன்னும் கைது செய்யும் படலம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இதுதவிர மூன்று செய்திப் பத்திரிக்கைகளின் உரிமம் மறுக்கப்பட்டு மூடப்பட்டுள்ளன. பொதுக் கூட்டங்களும் ஊர்வலங்களும் தடை செய்யப்பட்டுள்ளன.

உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் மலேஷியாவில் நீண்டகாலமாக நிலவி வந்த போதிலும், அச்சட்டத்தின் கீழ் பெருமளவில் கைது செய்யப்படுவது இதுவே முதன் முறையாகும். இச்சட்டத்தின்படி எந்த விசாரணையுமின்றி ஒருவரை சிறையிலடைக்க முடியும். கைதானவர் நீதிமன்றத்தில் வழக்காடவும் உரிமையில்லை. குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையை அனுபவிக்க வேண்டும்.

திடீரென அடக்குமுறைச் சட்டத்தை ஏவி நூற்றுக்கணக்கில் பலரைச் சிறையிடக் காரணமென்ன? பாசிசப் பிரதமர் அக்.28 அன்று தனது பாராளுமன்ற உரையில், "எதிர்கட்சியினர் இனவெறியையும் மதவெறியையும் தூண்டிவிட்டு 1969ம் ஆண்டில் நடந்ததைப் போல ஒரு கலவரத்திற்கு வித்திடுகிறார்கள். கம்யூனிஸ்டுகள் இந்தச் சூழ்நிலையை அறுவடை செய்ய முயற்சிக்கிறார்கள். நாட்டின் ஒருமைப்பாட்டைக் கருதி மத—இன—தீவிரவாத சக்திகளை ஒடுக்கவே இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டோம்" என்று நியாயப்படுத்தினார். ஆனால் ஆளும் கூட்டணியிலேயே விரிசல் ஏற்பட்டு, கூட்டணி கட்சிகள் எதிர் கட்சிகளோடு சேர்ந்து பிரதமர் மகாதிரை எதிர்த்துப் போராடுகின்றன. ராணுவம் கையில் துப்பாக்கியுடன் தெருக்களில் அலைகிறது. முஸ்லிம் மக்கள் நிறைந்த அந்நாட்டில் 'மீலாடிநபி' விழாகூட இம்முறை சிறப்பாக நடைபெறவில்லை. அடுத்து என்ன நடக்குமோ என்ற அச்சமும் பீதியும் நிறைந்த நிலைமையே மலேசியாவைக் கவ்வியுள்ளது.

இந்தியாவின் தென்கிழக்கேயுள்ள மலேசியா வீரம் செறிந்த ஏகாதிபத்திய எதிர்ப்புப் பாரம்பரியத்தைக் கொண்டது. ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க தளையில் சிக்குண்டு கிடந்த மலேசிய மக்கள், கம்யூனிஸ்டுகளின் தலைமையில் மக்கள் படையை நிறுவி தீரமிக்க போர் நடத்தினர்.



மலேசியாவின் பாசிசப் பிரதமர் மகாதிர்

இரண்டாம் உலகப் போரின் போது ஆக்கிரமிக்க வந்த ஜப்பானை எதிர்த்து தேசபக்த ஜனநாயக முன்னணியை நிறுவி ஆயுதப் போராட்டத்தில் முன்னேறி முக்கிய மையங்களில் அதிகாரத்தை நிறுவியிருந்தனர். உலகப் போரில் ஜப்பான் சரணடைந்ததும் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் தனது காலனியாதிக்கத்தைத் திரும்பவும் நிலைநாட்ட முயன்றது. மலேய மக்கள் படையை நிராயுதபாணியாக்கி தமது அதிகாரத்தை நிலைநாட்ட, கம்யூனிஸ்டுகளையும், தொழிற்சங்க மற்றும் தேசபக்த ஜனநாயக அமைப்புகளின் தலைவர்களையும் ஆயிரக் கணக்கில் படுகொலை செய்தது. கொரில்லாப் போரில் ஊன்றி நின்ற மக்கள் படை எதிர்த்து நின்று போராடிய போதிலும், இறுதியில் பின்வாங்க நேரிட்டது.

ஆங்கிலேய ஏகாதிபத்தியவாதிகள் தமது அடிவருடிகளான தரகு முதலாளிகள்—நிலப் பிரபுக்களிடம் அரசியல் அதிகாரத்தை ஒப்படைத்தனர். இந்தியாவைப் போலவே மலேசியாவிலும் 1957ல் பெயரளவிலான சுதந்திரமும், பாராளுமன்ற ஆட்சிமுறையும் நிறுவப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டது. ஏகாதிபத்திய அடிவருடி துங்க் அப்துல் ரஹ்மான் முதல் பிரதமரானார்.

மலேசியா பல தேசிய இன மக்களையும், மதங்களையும் உள்ளடக்கிய நாடு. மலேசிய மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர் மலாய் மக்கள்; முஸ்லிம் மதத்தினர். மீதியுள்ளோர் சீனர்களும் இந்தியர்களுமாவர் (தமிழர்கள்). எஞ்சியுள்ளோர் சபா, சராவக் ஆகிய கிழக்குமாநிலங்களைச் சேர்ந்த கடாசான், கயான், பேனான் பழங்குடி இனத்தினர்.

1957ல் சுதந்திரமடைந்த போது, உருவாக்கப்பட்ட அரசியல் சட்டம், பூர்வீக மலாய் மக்களுக்கு ('பூமிபுத்திரர்கள்') சிறப்பு உரிமைகளையும் சலுகைகளையும் வழங்கியது. சீனர்களுக்கும் தமிழர்களுக்கும் குடியுரிமை மட்டுமே வழங்கப்பட்டது. இஸ்லாம் அரச மதமாகவும், மலாய் மொழி அரச மொழியாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது. ஆனால் மற்ற மொழிகளையும், மதங்களையும் பின்பற்று



படிப்பகம்

www.padippakam.com

அறிவித்தது.

சீனர்கள் வர்த்தகத் துறையில் ஏகபோகமாக உள்ளனர். இந்தியர்கள் ரப்பர் தோட்டத் தொழிலாளிகளாகவும், தகர ஆலைத் தொழிலாளிகளாகவும், கல்லூரி ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்களாகவும் உள்ளனர். மொத்த மக்கட் தொகையில் சீனர்கள் 35 சதவீதமாகவும் இந்தியர்கள் 10 சதவீதமாகவும் உள்ளனர்.

மலேசிய அரசு சிறுபான்மை இனத்தவரது நலன்களைப் படிப்படியாக நசுக்கிக் கொண்டே வந்தது. இதற்கெதிராகப் போராடி வந்த சீனர்கள் தங்கள் நலனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனநாயகச் செயல்பாட்டுக் கட்சியை 1969 தேர்தலில் பெருவாரியாக வெற்றிபெறச் செய்தனர். இதனால் இனவெறிக்குப் பலியாகி ஆத்திரமுற்ற மலேய மக்கள் சீனர்களைத் தாக்கி கலவரத்தில் இறங்கினர். நூற்றுக்கணக்கான சீனர்கள் கொல்லப்பட்டு, அவர்களது உடமைகள் சூறையாடப்பட்டு கலவரம் தலைவிரித்தாடியபோது பிரதமர் துங்க் அப்துல் ரஹ்மான் பதவி விலகினார். அதன் பின் பிரதமரான துன் ரசாக், ‘செல்வந்தர்களான’ சீனர்களுக்கும் ‘ஏழைகளான’ மலாயர்களுக்குமான இடைவெளியைக் குறைக்கப் போவதாக கூறிக் கொண்டு, புதிய பொருளாதாரக் கொள்கையை அறிவித்து 20 ஆண்டு காலத்திற்கு சீனர்களும், தமிழர்களும் மலேசியாவில் முதலீடு செய்து தொழில் நடத்தும் உரிமையை குறைத்தார்.

முன்பு, துங்க் அப்துல் ரஹ்மான் காலத்தில் இனவெறியைத் தூண்டுவதாக குற்றம் சாட்டப்பட்டு கட்சியிலிருந்து விரட்டப்பட்ட மகாதிர், மீண்டும் துன் ரசாக் காலத்தில் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். கட்சியில் தனக்கு ஆதரவாக விசுவாச கும்பலை திட்டமிட்டு உருவாக்கி, துன் ரசாக்கிற்கு அடுத்து 1981ல் பிரதமரானார். முஸ்லிம் அடிப்படைவாதிகளுடன் கள்ளக் கூட்டு சேர்ந்தும் இனவெறியைக் கிளறிவிட்டும் சிறுபான்மை மக்களின் உரிமைகளை மேலும் நசுக்கியும், ஊழலில் ஊறித் திளைத்து நாட்டை சூறையாடியும் பொருளாதாரத்தை நிர்மூலமாக்கியது மகாதிர் அரசு.

மகாதிர் ஆட்சியில் பொருளாதாரம் மிகவும் நெருக்கடிக்குள்ளாகி இவ்வாண்டு வெறுமனே 2 சதவீத வளர்ச்சியையே எட்டும் நிலையிலுள்ளது. நாடு ‘சுதந்திர’ மடைந்த பிறகு இதுவரை காணாத வகையில் வேலையில்லாத் திண்டாட்டம் 10 சதவீதத்துக்கும் மேல் உயர்ந்துவிட்டது.

ஆளும் மகாதிர் கும்பல் அடக்குமுறையை ஏவி விடுவதற்கு முக்கிய காரணம், அது ஊழலிலும் கோஷ்டி சண்டையிலும் சிக்குண்டு அம்பலப்பட்டு தனிமைப் பட்டுப் போயிருப்பதும், தனது குறுகிய

பயன்படுத்துவதுமே காரணமாகும்.

● ஆளும் அம்னோ கட்சியில் மகாதிர் கும்பலுக்கும் அதிருப்தியாளர்களுக்குமான கோஷ்டி சண்டை முற்றி வருகிறது. கட்சித் தேர்தலில் மகாதிர்கும்பல் மிகக் குறுகிய பெரும்பான்மையில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. தேர்தல் தில்லுமுல்லுகள் காரணமாக 11 அம்னோ கட்சி முன்னணித் தலைவர்கள் தேர்தல் முடிவுகளை எதிர்த்து வழக்கு தொடர்ந்துள்ளனர். நீதிமன்றத்துக்கு வெளியே இந்தத் தகராறை அவர்களால் தீர்த்துக் கொள்ள முடியவில்லை. நவம்பரில் இந்த வழக்கு விசாரணைக்கு வருகிறது. இதில் மகாதிர் கும்பலுக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டால், கட்சித் தலைவராகவும் பிரதமராகவும் மகாதிர் நீடிக்க முடியாமல் போகும்.

● தெற்கு— வடக்கு நெடுஞ்சாலை ஊழலில் மகாதிர் கும்பல் சிக்கித் திணறுகிறது. 500 கி.மீ. தூரத்திற்கு நெடுஞ்சாலை அமைக்கும் கட்டுமானப் பணியை தனியார் நிறுவனத்திற்கு தாரை வார்த்தது அரசு. இந்த நிறுவனம் மகாதிர் கும்பலின் பினாமியே என்பதும், இந்த ஒப்பந்தத்தின் மூலம் மகாதிர் கும்பல் 620 கோடி மலாய் டாலர்களைக் கொள்ளையிட்டிருப்பதும் வெளிவந்து நாறுகிறது.

● பெராக் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள அணுசக்தி—கதிரியக்கக் கழிவுகளை வெட்டியெடுத்து அவற்றை புகிட்மெரா எனுமிடத்தில் புதைக்கப் போவதாக அரசு அறிவித்துள்ளது. அணுசக்திக் கழிவுகளை வெட்டுவதால் கதிரியக்கம் பரவி கடும் ஆபத்து ஏற்படும் என்று பகுதிவாழ் மக்களும், சுற்றுச்சூழல் ஆய்வாளர்களும் எதிர்ப்பு தெரிவித்து மாபெரும் மக்கள் இயக்கங்களைத் தொடர்கின்றனர். நீதிமன்றததில் அரசுக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளனர். அந்த வழக்கு நவம்பர் மாதம் விசாரணைக்கு வருகிறது.

### ‘தமிழினத் தலைவரா’ துரோகியா?

மலேசியாவில் தமிழர்கள் அடக்குமுறைக்குள்ளாகி இருக்கும் போதுதான் அங்கே வேது உலகத் தமிழ் மாநாடு கோலாகலமாக நடந்தேறியது. தமிழன் நசுக்கப்பட்டாலும் தமிழை வளர்க்கும் திருப்பணியில் இறங்கிய ‘தமிழினத் தலைவர்’ கருணாநிதி விமானமேறி விரைந்து சென்று மாநாட்டில் கலந்து கொண்டார். ‘புறநானூற்று வீரத்தாயை ஈழத்தில் காண்கிறேன்’ என்று உணர்ச்சி பொங்க வீர வசனம் பேசிய அவர், மலேசியத் தமிழன் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப் பட்டிருப்பதை அறிந்தும் வாயே திறக்கவில்லை. ஆனால் “மூன்று இனங்கள் (தமிழ்—சீன—மலாய்) ஒன்றோடு ஒன்று மோதாமல் ஒற்றுமையாக உள்ள நாடு மலேசியதான்” என்று அடக்குமுறைக்குள்ளான தமிழர்களின் வெந்த புண்ணில் வேலைப்பாய்ச்சி விட்டு வந்தார். அது சரி; இப்போதைக்கு ஈழ விவகாரம்தானே அவரது அரசியல்பிழைப்புக்குஉதவுகிறது!



பழங்குடி மக்களின் உரிமைக்காகப் போராடிய ஆரிசன்நாகு



தொழிற்சங்கத் தலைவர் ஆரோக்கியதாஸ்



தொழிலாளர் உரிமைக்காகப் போராடிய டாக்டர் முகம்மது நசீர்



பினாங்கு பயனீட்டாளர் சங்க சட்ட ஆலோசகர் மீனாட்சி ராமன்



படிப்பகம்

www.padippakam.com

● அரசியல் நிர்ணய சட்டத்தை மறு ஆய்வு செய்யக் கோரி எதிர்க்கட்சிகளும், பல்வேறு சமூக—சீர்திருத்த இயக்கங்களும் போராடி வருகின்றனர். பிரதமர் மகாதிர் இதை ஏற்க மறுக்கிறார். சட்டத்தை மறு ஆய்வு செய்வதன் மூலம், மலாய் மக்களுக்கு உள்ள சிறப்பு உரிமைகளைப் பறிக்க அனுமதிக்க மாட்டோம் என்று இன வெறியோடு கொக்கரிக்கிறார். ஆனால் அரசியல் சட்டத்தை மறு ஆய்வு செய்யக் கோரும் இயக்கம் விரிந்த அளவில் பரவி முன்னாள் நீதிபதிகளே இப்போராட்டங்களில் பங்கேற்கின்றனர்.

● கல்லூரிகளில் தாய் மொழியில் விருப்பப்பாடம் கற்பிக்கப்படுவதை மகாதிர் அரசு தடை செய்துள்ளது. இதனால், சீன மற்றும் தமிழ் மக்கள் தங்கள் உரிமைகள் நசுக்கப்படுவதாக எதிர்ப்பு தெரிவித்தனர். மாணவர் அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் போராடி வருகின்றன.

● மலேசியாவில் மலாய் மக்களுக்கு அடுத்த பெரிய சமூகமாக இருப்பவர்கள் சீனர்கள். சீனப் பள்ளிகளில், சீனர்களின் தாய்மொழியான 'மாண்ட் ரீன்' மொழி தெரியாதவர்களை ஆசிரியர்களாக நியமித்து திடீரென உத்திரவு பிறப்பித்துள்ளது மகாதிர் அரசு. தங்களது கலாச்சாரத்தையும் மொழியுணர்வையும் நசுக்குவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்று சீனர்கள் எதிர்ப்பு தெரிவித்துப் போராடுகின்றனர். மறுபுறம், அரசின் நடவடிக்கையை ஆதரித்து சீன மக்களுக்கு எதிராக அம்னோ கட்சியின் இளைஞர் அமைப்பு எதிர் போராட்டம் நடத்துகிறது.

இத்தகைய நெருக்கடிகளில் இருந்து தப்பிக்கவும், தனது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ளவும் இனவெறியைத் தூண்டிவிட்டு அடக்குமுறையை ஏவி விட்டுள்ளது மகாதிர் அரசு. இந்த விவகாரங்களில் ஆளும் கும்பலுக்கு எதிராக நிற்பவர்கள் மீதுதான் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் ஏவிவிடப்பட்டுள்ளது.

தெற்கு—வடக்கு நெடுஞ்சாலை ஊழலை அம்பலப்படுத்திய ஜனநாயக செயல்பாட்டுக் கட்சித் தலைவர் லிம்கிட்சியாங், அணுசக்தி கழிவுகளை வெட்டியெடுத்து வேறிடத்தில் புதைப்பதற்குஎதிராக மக்களைத் திரட்டிப் போராடும் சுற்றுச் சூழல் பாதுகாப்புசங்கத்தின் செயல்வீரர் டான் கா கெங், அரசியல் சட்டத்தை மறு ஆய்வு செய்யவும், அடக்குமுறைச் சட்டங்களை எதிர்த்தும் போராடி வரும் சந்திரா முசாபர், சிவில் உரிமை, கலாச்சார உரிமைக்காகப் போராடும் டாக்டர் குவா கியா சூங், தொழிலாளர்



அணுக் கதிரியக்க எதிர்ப்பு இயக்கச் செயலாளர் லீ கூன் புன்,



உதவித்தலைவர் டான்கா கெங்



மனித உரிமைக் கழகத் தலைவர் டாக்டர் சந்திரா முசாபர்

உரிமைக்காகவும், குழந்தை உழைப்புக்கு எதிராகவும் போராடி வரும் டாக்டர் முகம்மது நசீர், தொழிற்சங்கத் தலைவர் ஆரோக்கியதாஸ், பினாங்கு நுகர் பொருள் பயனீட்டாளர் சங்கத்தின் சட்ட ஆலோசகர் மீனாட்சி ராமன், பெனான்—கயான் பழங்குடி மக்கள் குற்றம் செய்தால் தண்டம் வசூலிக்கும் கொடூர சட்டத்தை எதிர்த்து அம்மக்களின் உரிமைக்காகப் போராடிய ஆரிசன் நாகு முதலான முற்போக்கு ஜனநாயக வாதிகளும், கம்யூனிச ஆதரவாளர்களுமே பெருமளவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அடக்குமுறையிலிருந்து தற்காத்துக் கொள்ளவும், எதிர்த்துப் போராடவும்,பல்வேறு கட்சிகளின், மக்கள் திரள் இயக்கத் தலைவர்களும், அணிகளும் தலைமறைவாகி விட்டனர். மகாதிர் கும்பல் அடுத்து ராணுவ ஆட்சியை அரங்கேற்றுவதற்கான அபாயம் நிலவுகிறது. இனி அமைதியான நிலைமைக்கு மலேசிய அரசியல் அகராதியில் இடமில்லை. இனவெறியும் மதவெறியும் பிடித்தலையும் மகாதிர் கும்பல் இந்திய—சீன மக்களின் உரிமைகளைப் பறித்து அடக்கவே துடிக்கிறது.

## இந்தியாவின் வர்க்கப் பாசம்

பிஜி நாட்டில் இந்தியர்கள் உரிமைகள் மறுக்கப்பட்டு அடக்கியொடுக்கப்படுவதற்கு எதிராக நீலிக் கண்ணீர் வடிக்கும் இந்திய அரசு, மலேசியாவில் இந்தியர்கள் நசுக்கப்படுவதை எதிர்த்து வாயே திறக்கவில்லை. காரணம், மலேசியாவில் வாழும் இந்தியர்கள் ரப்பர் தோட்டத் தொழிலாளிகளாகவும், மருத்துவர்கள் ஆசிரியர்கள் ஆகிய நடுத்தர வர்க்கத்தினராகவும் உள்ளனர். ஆனால் பிஜியில் வர்த்தகர்களாகவும் பெருமுதலாளிகளாகவும் உள்ளனர். எனவேதான், வர்க்கப் பாசத்தோடு பிஜியில் வாழும் இந்தியர்கள் நலனுக்காக கூப்பாடு போடுகிறது; மலேசியாவில் வாழும் இந்தியரைப் பற்றி வாய்திறக்க மறுக்கிறது.

'திஸ்டார்' உள்ளிட்டு மூன்று முக்கிய பத்திரிக்கைகள் தடை செய்யப்பட்ட பிறகு இன்று மலேசியாவில் அரசு விசுவாச பத்திரிக்கைகள் மட்டுமே வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவற்றின் உரிமையாளர்கள் அனைவரும் அம்னோ கட்சியினர். இப்படி தனது அடக்குமுறைச் சட்டத்தின் மூலம் பத்திரிக்கைத் துறையை தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு ஏகபோகமாக்கியுள்ளது மகாதிர் கும்பல்.

இலங்கை தேயிலைத்தோட்டத் தொழிலாளிகளைப் போலவே, ஆப்பிரிக்காவின் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளிகளைப் போலவே, மலேசியாவில் குடியேறிய இந்திய—சீன மக்களும் தங்களது அளப்பரிய உழைப்பால் அந்நாட்டை வளப்படுத்தி முன்னேற்றியுள்ளார்கள். அந்த மண்ணோடு ஒன்றிணைந்து இன்பத்தையும் துன்பத்தையும் பகிர்ந்து கொண்டார்கள். எனவே தான் மலாய் இனத்தவரைப் போலவே இந்தியர்களுக்கும் சீனர்களுக்கும் அரசியல்—பொருளாதாரம்—கலாச்சாரம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் சம உரிமை வழங்கப்படவேண்டும். ஆனால் தமது ஆட்சிக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியிலிருந்து தப்பிக்கும் பொருட்டு ஆளும் மகாதிர் கும்பல் இனவெறியைத் தூண்டிவிட்டு அடக்கு முறையை ஏவிவிடுகிறது.

நசுக்கப்படும் இந்திய—சீன மக்கள் தங்கள் உரிமைக்காகப் போராடும் அதே சமயம் இன வெறியூட்டலுக்கு எதிராகவும் நிற்க வேண்டும். இந்திய—சீன—மலாய் மக்களின் ஒற்றுமையும்சமத்துவமும் தான், இனவெறிக்கும் அடக்குமுறைக்கும் முடிவு கட்டுவதோடு, காலனியாதிக்கத் தளைகளிலிருந்து முற்றாக விடுதலை பெறவும் வழி வகுக்கும்.

● பாலன்



படிப்பகம்

www.padippakam.com

# டெல்லி-போபால் கொலைகாரர்க தப்பிக்க முடிய

“கொல்லுவது எமது குறிக்கோள் அல்ல” இதைச் சொல்லுவது யார் தெரியுமா? காங்கிரசார். ஈழப் படுகொலைகளை நியாயப்படுத்தி இந்திரா பிறந்த நாளன்று காங்கிரசார் வெளியிட்ட சுவரொட்டியின் முதல்வரி. இது எப்படி இருக்கிறது தெரியுமா? கசாப்புக் கடைக்காரன் சுத்த சைவ மதப் பிரசங்கம் செய்வதுபோல இருக்கிறது.

“1984 நவம்பர் முதல் தேதி அன்று காங்கிரசு எம்.பி சஜ்ஜன் குமார், எண்ணெய் வியாபாரி நாதுரதன்குப்தா, உதால், சிஸ்ராம் ஹால்வாய் ஆகியோர் தலைமையில் ஒரு கும்பல் எங்கள் வீடு நோக்கி வந்தது. சீக்கியர்களைக் கொல்லுங்கள்; அவர்களையும் அவர்களது வீடுகளையும் எரியுங்கள் என்று கத்தினார்கள். எனது கணவரை வெளியே இழுத்துச் சென்றனர். ஒரு கூரான ஆயுதத்தால் அவரது வயிற்றைக் குத்திக் கிழித்தனர். பெட்ரோல்—மண்ணெண்ணெயில் முக்கிய பிறகுளரித்தனர். எங்கள் வீடும் கொளுத்தப் பட்டது” என்று குற்றப்பத்திரிக்கை சமர்ப்பித்துள்ளார் அன்வார் கௌர்.

அன்வார் கௌர்—அவளது கணவன், சகோதரன், மூன்று மருமகன்கள், கணவனின் சகோதரன், நாத்தனாரின் நான்கு பிள்ளைகள் ஆகிய பத்து உறவினர்களும் படுகொலை செய்யப்பட்டதை கண்ணாரக் கண்ட சீக்கிய விதவை. இப்போது அவள் வாழும் புதுடில்லி—திலக் விஹாருக்கு விதவைகள் நகர் என்று மற்றொரு பெயருண்டு. ஏனெனில் காங்கிரசு குண்டர்களின் கொலைவெறியால் தனது கணவன்மார்களை இழந்த ஆயிரம் சீக்கிய விதவைகள் அங்கே வாழுகின்றனர்! அவர்களைப் போல வாழவும் இடம் கிடைக்காமல் டெல்லி தெருக்களில் காலத்தைத்தள்ளிக்கொண்டு மேலும் 2000 சீக்கிய விதவைகள் உள்ளனர்.

இவர்கள் அத்தனை பேரும் காங்கிரசு கொலை வெறியர்களால் தங்கள் கணவன்மார்கள் தாக்கப்பட்டு வெட்டிக் குத்தப்பட்டு மண்ணெண்ணெய் ஊற்றி உயிரோடு எரிக்கப்பட்டதை நேரே பார்த்தவர்கள். அதிர்ச்சியும் துயரமும் அவர்களைக் கவ்விக் கொண்டுள்ளது. “எங்களுக்குக் கொஞ்சம் விஷத்தைக் கொடுங்கள். இனி நாங்கள் எவ்வாறு உயிர் வாழப் போகிறோம் யாருக்காக வாழப் போகிறோம்” என்று கதறுகிறார்கள். அவர்களுடைய குடும்பத்தில் பத்து வயதுக்கு மேற்பட்ட சீக்கியப் பையன்கள் ஒருவர்கூடக் கிடையாது.

சிலபெண்கள், அவர்களுடைய மாமியார் அல்லது தாயார், நான்கு அல்லது ஐந்து இளம் விதவைகள், கற்பழிக்கப்பட்ட இளம் பெண்கள். பத்து வயதுக்குட்பட்ட சில குழந்தைகள் இவர்களைக் கொண்ட அந்தக் கூட்டத்தினரைக் குடும்பம் என்றுகூடச் சொல்ல முடியாது. ஆண்வாடையே கூடாதென்று அழித்திருக்கின்றனர். கர்ப்பிணிப் பெண்ணொருத்தியின் வயிற்றிலிருந்த குழந்தை ஆணாக இருக்குமோ என்று கருதி அவளது வயிறைக் குத்திக் கிழித்தனர்.

இந்தப் பயங்கரப் படுகொலைகள் நடந்தது மூன்றாண்டுகளுக்கு முன்பு. அதாவது 1984 அக்டோபர் 31ந் தேதி, அன்றைய பிரதமர் இந்திரா இரண்டு சீக்கிய மெய்க்காப்பாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதைச் சாக்காக வைத்து சீக்கியர்களுக்கு எதிராக இந்து மதவெறியைத் தூண்டிவிட்டு அரசியல் ஆதாயம் தேடும் நோக்கத்துடன் இந்திரா காங்கிரசார் திட்டமிட்டு 5000 சீக்கியர்களைப் படுகொலை செய்தனர். பல சீக்கியர்களை உயிரோடு எரித்து பெண்களைக் கற்பழித்து, அவர்களது உடமைகளைச் சூறையாடி, வீடுகளையும், கடைகளையும், வாகனங்களையும் கொளுத்தினர். இவ்வளவு அட்டூழியங்களும் இராணுவத்தினர் முன்னிலையில், போலீசார் உடந்தையுடன்—பங்கேற்புடன் நடந்தன.

சீக்கியர்களின் பிணங்கள் மீதேறி ஆட்சிக்கு வந்த பாசிச ராஜீவ் குற்றவாளிகளைக் காப்பாற்றுவதிலும், பதவிகள் கொடுப்பதிலும், படுகொலைகளை நியாயப் படுத்துவதிலும் ஈடுபட்டார். ஆனால் பிறகு போட்ட பஞ்சாப் ஒப்பந்தப்படி டெல்லி மற்றும் கான்பூர் கொலைகளை மட்டும் விசாரிக்க ஒப்புக் கொண்டார். அதற்காக ரங்கநாத் மிஸ்ரா கமிஷன் அமைக்கப்பட்டது. அது ஏறக்குறைய இரண்டாண்டுகள் இழுத்தடித்துவிட்டு, “காங்கிரசுக் கட்சி இந்தக் கொலைகளைச் செய்யவில்லை, அதன் உறுப்பினர்கள் யாராவது பங்கேற்றிருக்கலாம். அது பற்றி தனியே விசாரிக்க வேண்டும்” என்று சொல்லிகாங்கிரசு குற்றவாளிகளுக்கு நற்சான்றிதழ் வழங்கியது.

ஆனாலும் சீக்கியர்களைஏமாற்றுவதற்காக மேலும் விசாரணை நடத்துவதற்கென்று ஜெயின்—பேனர்ஜி கமிட்டியை பாசிச ராஜீவ் கும்பல் நியமித்தது. ஏனெனில் குற்றவாளிகளைத் தாமே தண்டிக்கும் வகையில் காங்கிரசு எம்.பி லலித் மகானையும் அவரது மனைவியையும், காங்கிரசு கவுன்சிலர் அர்ஜுன் தாஸையும் கொன்று





விபத்தின்போது கருவுற்றிருந்த குழந்தைகள் அனைத்தும் ஊனமாகவே பிறந்தன.



படிப்பகம்

www.padippakam.com

பழி தீர்த்தனர், சீக்கியத் தீவிரவாதிகள்; மற்ற பிற குற்றவாளிகளான மத்திய மந்திரிகள் எச்.கே.எல். பகத், ஜகதீஸ் டைட்லர், மற்றும் தரம் தாஸ் சாஸ்திரி, சஜ்ஜன் குமார் போன்றவர்கள் உயிருக்கு அஞ்சி குண்டு துளைக்காத கோட்டும் காருமாக ஒளிந்து கொண்டு திரிகின்றனர்.

இதனாலெல்லாம் தண்டனைகளில் இருந்து தப்பிவிட முடியும் என்று காங்கிரசுக் குற்றவாளிகள் நம்புகின்றனர். ஆனால் உற்றார்களையும் உடமைகளையும் இழந்து அனாதைகளாக்கப்பட்ட நிலையிலும் சீக்கியர்கள் தமது உறுதியை இன்னும் இழக்கவில்லை. குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும், நட்டஈடு பெறுவதற்குமான போராட்டத்தைத் தொடருகின்றனர். ரங்கநாத் மிஸ்ரா கமிஷன் அறிக்கையைக் கொளுத்தித் தமது ஆத்திரத்தைக் காட்டினர். முன்னாள் எம்.பியும், இன்னாள் டில்லி காங்கிரசு பொதுச் செயலாளரும், பிரதான கொலையாளிகளில் ஒருவருமான சஜ்ஜன்குமாருக்கு எதிராக 500 பேர் குற்றவாக்குமூலம் கொடுத்துள்ளனர். அதைவிட அதிகமான பேர் மத்திய மந்திரிகளாக உள்ள டில்லிப்படுகொலைகளுக்குத் தலைமையேற்ற எச்கேஎல் பகத், ஜகதீஷ் டைட்லர் ஆகியோருக்கு எதிராக குற்ற வாக்குமூலம் கொடுத்துள்ளனர். இன்னும் பல குற்றவாளிகளை அடையாளங் காட்டவும் சாட்சியமளிக்கவும் சீக்கியர்களோடு பல இந்துக்களும் முஸ்லீம்களும் முன் வந்துள்ளனர்.

எட்டுமாத இழுத்தடிப்புக்குப் பிறகு சஜ்ஜன்குமார் மீதான குற்றங்களுக்கு ஆதாரமிருப்பதாகக் கூறி வழக்குத் தொடுக்கும்படி டெல்லி போலீசுக்கு உத்திரவிட்டிருக்கிறது காரணமும் நோக்கமும் எதுவாயினும் சரி. உத்திரவு போட்டு ஒரு மாதமாகியும் நடவடிக்கை எடுக்க மறுக்கிறது டில்லி போலீசு. டில்லி துணைக் கவர்னர் தலைமையிலான ஆட்சிக் குழுவும், டில்லி போலீசும் ஒருவரை ஒருவர் கை காட்டி அதிகார வர்க்கத் தில்லுமுல்லு சிகப்புநாடா முறைக்குள் உத்திரவைக் கட்டிப் போட்டுள்ளனர். இதற்கிடையே சஜ்ஜன்குமார் மீது நேரடிக் குற்றஞ்சாட்டும் அன்வார் கௌரின் சகோதரன் வீட்டுக்குப் போனார்கள் சில காங்கிரசுத் தலைவர்கள். வழக்கைத் தொடராமலிருந்தால் இரண்டு லட்சம் ரூபாய் தருவதாக ஆசை காட்டினர்; மறுக்கவே மிரட்டினர்.

''நான் வேண்டுமானால் இரண்டு லட்சம்ரூபாய் தருகிறேன். சஜ்ஜன் குமாரின் மகனைக்கொல்ல விடுங்கள் பார்க்கலாம்'' என்று வெறுப்பும் ஆத்திரமும் பொங்கக் கேட்கிறார் அன்வார் கௌர். ஆனால் அந்த ஏழை விதவையோ ஒரு நாளைக்குப் பத்தே ரூபாய் தையற்கூலியாக சம்பாதிப்பவள் தான். அவ்வளவு வெஞ்சினத்தை அவள் தேக்கி வைத்திருக்கிறாள்! விடுமா பாசிச கும்பல்? விதவைகள் நகரில் அவளுக்குக் கொடுத்திருக்கும் குடியிருப்பைக் ''காலி செய்! இல்லையானால் 42000 ரூபாய் கட்டு'' என்று விரட்டுகிறது. ''கலவரத்தினால் விதவைகளான எங்களிடம் பணமேது? நாங்கள் எங்கே போவோம்?'' என்று ஆத்திரத்தோடு கேட்கிறாள் அன்வார் கௌர்.

''குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்கிற கோரிக்கையை மட்டும் கைவிட்டு விடுங்கள். உங்களுக்கு வேண்டியதெல்லாம் தருகிறோம், மறுவாழ்வளிக்கிறோம்'' என்று பூடாசிங் உட்பட பல காங்கிரசுத் தலைவர்கள் நிர்ப்பந்திக்கின்றனர். ஆனால் சீக்கியர்கள் மிரண்டுவிடவில்லை. அகதிகள் அவ்வளவு பேரும் கூண்டோடு பஞ்சாப்புக்குக் குடிபோய்விடுவோம் என்று எச்சரித்தார்கள். அதன் பிறகுதான் ஜெயின்-பேனர்ஜி கமிட்டியும் கூட நகரத் தொடங்கியது.

அதுவும் குற்றவாளிகளில் ஒருவரை மட்டுமே காட்டியிருக்கிறது. பெரு முதலைகள் இன்னும் காங்கிரசு சகதிக்குள் ஒளிந்து கொண்டிருக்கின்றன. வாய் திறந்தால் புளுகுவதைத் தவிர வேறு பேசி அறியாத பாசிச கும்பலின் தலைவர் ராஜீவோ 1985இல் இங்கிலாந்து வானொலிக்கு அளித்த பேட்டியில், ''காங்கிரசு உறுப்பினர் ஒருவர்கூட கலவரத்தில் ஈடுபடவில்லை'' என்று சாதித்துள்ளார். பாசிச ராஜீவ் கும்பல் ஈழத்தில் நடத்திய படுகொலைகளின் இரத்தக் கறைகளைத் துடைத்துக் கொண்டிருக்கும் போதே அதன் தலைநகரிலிருந்து அழுகி நாறும் பிணங்களின் வாடை வீசுகிறது.

பல படுகொலைகளுக்குக் காரணமான கிரிமினல் குற்றவாளி தான் பாசிச ராஜீவ் கும்பல். அப்படி இருக்கும்போது இதைவிட பெரிய உலகளவிலான கொலைகாரக் கும்பலான ஏகாதிபத்தியவாதிகளை விசாரிக்கவோ, தண்டிக்கவோ துணியுமா? 5000பேரைக் கொன்று 3 லட்சம் பேரைப்பாதித்த போபால் விஷவாயு படுகொலைக்குக் காரணமானவர்களைத் தண்டிக்காமல், அதிகப்படி நட்டஈடு பெறாமல் விடப்போவதில்லை என்று பாசிச ராஜீவ் கும்பல் சவடால் அடித்தது. ஆனால் இதுவே கூட குற்றவாளிகளைத் தப்புவிப்பதற்கான ஒரு தந்திரம்தான் என்பது இப்போது வெளிவந்து விட்டது.

இந்த நோக்கத்துக்காகத்தான் எடுத்தவுடன் போபால் வாயுக் கசிவு (நட்டஈடு கோரிக்கையை முறைப்படுத்தும்) சட்டம் 1985 என்று ஒரு தனிச் சிறப்பான சட்டத்தைக் கொண்டு வந்தது. அதன் படி பாதிக்கப்பட்டவர்கள் வழக்காடவோ, தாம் விரும்பும் வக்கீலை நியமித்துக் கொள்ளவோ உரிமை கிடையாது. இப்படி வழக்காடுவதற்கான ஏகபோக உரிமைபெற்ற இந்திய அரசு அமெரிக்காவிலும் வழக்குத் தொடுத்தது. அங்கிருந்து போபால் மாவட்டக் கோர்ட்டுக்கு வழக்குக் கட்டுக்களை வீசியடித்தனர். இங்கே ஆரம்பக்கட்ட சட்ட விதிமுறைகள் பற்றிய இழுத்தடிப்பு முடிந்து விசாரணைக்கு வந்திருக்கிறது. இந்த நிலையில் கோர்ட்டுக்கு வெளியே பஞ்சாயத்துப் பேசித் தீர்த்துக் கொள்வதற்கு இந்திய அரசும் யூனியன் கார்பைடு கம்பெனியும் இறங்கியுள்ளன.

''கொடுப்பதை வாங்கிக் கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு வினியோகிப்பதே அவர்களுக்கு நல்லது. வழக்குப் போட்டு யூனியன் கார்பைடின் குற்றத்தை நிரூபிக்க முடியாது. சட்டச் சிக்கல்களுக்குள் சிக்கி நீண்டகாலம் இழுத்தடிக்கப்படும்'' என்று கம்பெனி பிரச்சாரம் செய்கிறது. வழக்காடினால் விபத்துக்கான காரணம் சதியே என்று நிரூபிப்பதற்கான ஆதாரங்களை உருவாக்கி வைத்திருக்கிறது. உயர் அதிகாரிகள் மீதான பகைமை காரணமாக ஒரு ஊழியர் விஷவாயு இருந்த தொட்டிக்குள் நீரைப் பாய்ச்சிவிட்டார். இதனால்தான் விஷவாயுக் கசிவு ஏற்பட்டது என்று ஒப்புக்கொள்ளும் வாக்குமூலம் ஒன்றைத் தயாரித்துள்ளது. விஷவாயுத் தொட்டியின் அழுத்தமானி நீக்கப்பட்டு தண்ணீர்குழாய் செருகப்பட்டிருந்ததைப் பார்த்ததாக ஒரு உயர்

*திரமினில் வந்த சீக்கியர்கள்*
*பிணமாகவே திறக்கப்பட்டார்கள்*

ஜெயின்—பேனர்ஜி கமிட்டி. ''மற்ற குற்றவாளிகளை ஏன் விட்டுவிட்டனர்? இது ஒரு சோதனைக்கான ஒரு மாதிரிக்கான வழக்குத்தானா? இல்லை, தற்போது காங்கிரசுத் தலைமையிடம் செல்வாக்கிழந்து விட்ட சஜ்ஜன்குமாரை பழிவாங்குவதற்கு அல்லது பலி கொடுத்து மற்றவர்கள் தப்பித்துக் கொள்வதற்கானதா? ஒருவர்மீது மட்டும் பெயருக்கு வழக்குப் போட்டு, பிறகு தப்புவித்து சீக்கியர்களை ஏமாற்றுவதற்கான நாடகமா? இல்லை, காங்கிரசுக்குள்ளே நடக்கும் போட்டியின் விளைவா? வரவிருக்கும் டில்லி நகரசபை மற்றும் ஆட்சிக்குழு தேர்தலில் ஓட்டுப் பொறுக்குவதற்கான உபாயமா?'' என்று பத்திரிக்கைகள் பல கேள்விகள் எழுப்புகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

பொறியியலாளரிடம் வாக்குமூலம் வாங்கியுள்ளது.

இந்தியச் சட்டப்படி சதி யென்ற காரணம் ஏற்றுக்கொள்ள முடியாது; என்றாலும் பெரிய அளவு நட்டஈடு கோருவதனால் யூனியன் கார்பைடு கழகம் என்கிற தலைமைக் கம்பெனிக்கும் எதிராக அமெரிக்காவில் வழக்குத் தொடர வேண்டும். அங்கு இந்தியச் சட்டங்கள் நிராகரிக்கப்படும். வழக்கில் தோற்றால் ஒரு பைசா கூட நட்டஈடு கிடைக்காது. அதுமட்டுமல்ல சட்ட—தொழில் விதிமுறைகளின் படி போபாலில் உள்ள யூனியன் கார்பைடு (இந்திய) கம்பெனியும் அமெரிக்க கம்பெனியும் வேறு வேறு நிர்வாகத்தின் கீழ் உள்ளன. இந்தியக் கம்பெனியில் தலைமை நிறுவனம் போட்டுள்ள பங்கின் அடிப்படையில் மட்டுமே நட்டஈடு தரக் கடமைப்பட்டுள்ளது; இந்தியக் கம்பெனியின் சொத்து முழுவதும் விற்றால் கூட போதிய நட்ட 4300 கோடி ரூபாயைத் தனது சொத்திலிருந்து முன் தொகையாக ஒதுக்கி வைக்கும்படி யூனியன் கார்பைடுக்கு ஏற்கனவே கோர்ட்டு உத்திரவு போட்டிருக்கிறது.

அமெரிக்காவிலுள்ள 50க்கும் மேற்பட்ட சமூக அமைப்புகளின் கூட்டமைப்பின் கணக்குப்படிபொருளாதார நட்டஈடு மட்டும் 4500 கோடி ரூபாய் ஆகும். ஆயுத பேரங்களில் பெரும் லஞ்சம் பெற்றதைப் போலவே போபால்மக்களின் உயிருக்கும் பேரம் பேசி பெரும் லஞ்சத் தொகையை வாரிக் கொள்ளத் துடிக்கிறது பாசிச ராஜீவ் கும்பல்.

ஆனால் பாதிக்கப்பட்ட போபால் மக்கள் அவ்வளவு லேசில் விடுவதாக இல்லை. சமூக சேவை அமைப்புகள், நிவாரண முகாம்கள் முதலியவை மூலம் யூனியன் கார்பைடின் உளவாளிகள் மக்களது போராட்டத்தை சிதைக்க முயன்றனர். பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய யென்றும், வழக்கு நடக்கும்போது மேலும் கருத்துக் கூற முடியாது என்றும் முதலில் மறுத்தார் மந்திரி. எதிர்க்கட்சியினர் வலியுறுத்திய போது, "நீதிமன்றக் குடையின் கீழ் நீதிமன்றத்துக்கு வெளியே தீர்வு காண்பதற்கான பேச்சு வார்த்தை நடக்கும்" என்றார் பித்தலாட்டக்கார பிரதமருக்குத் தகுதியான மந்திரி.

நட்டஈடுத் தொகை எந்த வகையில் எவ்வளவு பெறப்படுகிறது என்பது ஒரு புறமிருக்கட்டும்.

● இவ்வளவு மக்களைப் படுகொலை செய்த கிரிமினல் குற்றவாளிகளைத் தண்டிப்பது என்ன ஆனது? ● மூன்றாம் உலக நாடுகளிலே இதுபோன்ற பல கிரிமினல் குற்றங்கள் புரிந்து வரும் ஏகாதிபத்தியவாதிகளைத் தண்டிக்காமல் விடுவது சரியா? இரசாயனப் போருக்கான ஆராய்ச்சி—உற்பத்தி நடத்தியதால் போபால் விஷவாயுப் படுகொலை நிகழ்ந்தது. அதற்கு



"நான் வேண்டுமானால் இரண்டு லட்சம்ரூபாய் தருகிறேன். சஜ்ஜன் குமாரின் மகனைக்கொல்ல விடுங்கள் பார்க்கலாம்" என்று வெறுப்பும் ஆத்திரமும் பொங்கக் கேட்கிறார் அன்வார் கௌர். ஆனால் அந்த ஏழை விதவையோ ஒரு நாளைக்குப் பத்தே ரூபாய் தையற்கூலியாக சம்பாதிப்பவள் தான். அவ்வளவு வெஞ்சினத்தை அவள் தேக்கி வைத்திருக்கிறாள்! விடுமா பாசிச கும்பல்? விதவைகள் நகரில் அவளுக்குக் கொடுத்திருக்கும் குடியிருப்பைக் "காலி செய்! இல்லையானால் 42000 ரூபாய் கட்டு" என்று விரட்டுகிறது.



அன்வார் கௌர்—பத்து உறவினர்களும் படுகொலை செய்யப்பட்டதை கண்ட சீக்கிய விதவை.

சஜ்ஜன்குமார்— முன்னாள் எம்.பி.இன்னாள் டில்லி காங்கிரசு பொதுச் செயலாளர் — கொலையாளி

ஈடு கிடைக்காது என்று ஏகாதிபத்தியவாதிகள் மிரட்டுகின்றனர்.

எனவே 650லிருந்து 780 கோடி ரூபாய்வரை நட்டஈடாகப் பெற்றுக் கொண்டு போபால் மக்களை ஏய்த்து விடுவதற்கான பேரத்தில் பாசிச ராஜீவ் கும்பல் இறங்கியுள்ளது. அதுவும் 10ஆண்டுகளில் பல தவணைகளில் தரப்படும். அதிலும் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக்கான நட்டஈடாக 200 கோடி ரூபாயை அரசே சுருட்டிக் கொள்ளும்.

இந்திய அரசோ இவ்வளவு தொகை நட்ட ஈடு வேண்டுமென்று வெளிப்படையாக வழக்காடவே இல்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு டெல்லி ஸ்ரீராம் உணவு—உர ஆலையில் நடந்த விஷவாயுக் கசிவினால் இறந்தவர் மற்றும் பாதிக்கப்பட்டவருக்குப் பெறப்பட்ட நட்டஈட்டின் அடிப்படையில் பார்த்தாலும் 4300 கோடி ரூபாய் தரப்பட வேண்டும்.

பொய்ச் சாட்சிகள், ஆவணங்கள், மருத்துவ அறிக்கைகள் தயாரித்தனர். அதிகாரிகள், மருத்துவர்கள் மூலம் மருத்துவமனை ஆவணங்களைத் திருடினர்; பாதிக்கப்பட்டவர்கள் போராடியபோது போலீசை ஏவிவிட்டுத் தாக்கினர்; பொய் வழக்குகள் போட வைத்தனர். இவ்வளவையும் எதிர்த்து உறுதி குறையாது நின்ற போபால் மக்கள் ராஜீவ் கும்பலின் புதிய பேரத்தை எதிர்த்துத் தொடர்ந்து போராடுகின்றனர். கோர்ட்டுக்கு வெளியே நடக்கும் பேரத்துக்கு எதிராக கடந்த மாதம் டெல்லிக்குப் போய் நூற்றுக்கணக்கான பெண்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்; போபால் நகரில் கடையடைப்பு செய்தனர்.

யூனியன் கார்பைடுடனான பேரம் பற்றி விவரங்களைக் கூறுமாறு நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கோரியபோது வழக்கைத் தொடர்ந்து நடத்தப் போவதாகவும், கோர்ட்டுக்கு வெளியே தீர்த்துக் கொள்ளும்உத்தேசம் இல்லை

மேலும் போய் உயிரியல் போருக்கான ஆராய்ச்சி—உற்பத்தி நடத்துவதற்காக அமெரிக்காவுடன் நோய் தடுப்பு ஊசி குத்தும் ஒப்பந்தம் போட்டுள்ளது பாசிச ராஜீவ் கும்பல் ● போபாலில் விஷவாயு உற்பத்திக்கு அனுமதி கொடுத்த காங்கிரசு முதன் மந்திரி அர்ஜுன் சிங், ஜனதா முதன்மந்திரி சக்லேச்சா, போபால் வந்த ஆலை முதலாளிகளைப் காப்பாற்றி சிறப்பு விருந்தினராக உபசரித்து அமெரிக்கா அனுப்பி வைத்துவிட்ட பேரம் பேசும் பாசிச ராஜீவ் ஆகிய கிரிமினல் குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டாமா?

டெல்லி சீக்கியர் படுகொலை, போபால் விஷவாயுப் படுகொலை, போன்ற கிரிமினல் கொலைக் குற்றங்களுக்குக் காரணமானவர்கள் இப்போதைக்குத் தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் வரலாறு அவர்களைமன்னிக்காது புரட்சியில் பொங்கி எழும் மக்கள் இவர்களை அழித்தொழிப்பார்கள். ●



படிப்பகம்

www.padippakam.com

# புதிய கூலிப் பிரச்சாரகர்கள்

கல்யாணசுந்தரம்
ஜெயகாந்தன்
தெள்ளூர் தர்மராஜன்
சோ
கே.சுப்பு
தீபம் பார்த்தசாரதி
தா. பாண்டியன்

ஜனநாயகம், சோசலிசம், சமதர்மம், சர்வதேசியம் பேசும் முற்போக்கு உதிரிகள்; நீதி, நியாயம், நேர்மை, மனிதாபிமானம் பேசும் ஆச்சார காந்தீயவாதிகள்— இந்த இருபெரும் எதிர் எதிர் கூடாரம் மீண்டும் ஒரே குடையின் கீழ் ஒன்றிணைந்து செயல்படுகின்றன. ஈழப்பிரச்சினை சூடு பிடித்தவுடன் இவர்கள் அரசியல் வாழ்வில் மீண்டும் புது வசந்தம் தோன்றியுள்ளது.ஆக்கிரமிப்பை ஆதரிப்பது, ஈழத்தில் இருக்கும் இந்திய கொலைவெறி ராணுவத்தின் நடவடிக்கைகளை ஏற்றிப் போற்றுவது, இதை விமர்சிப்பவர்களை சிறை பிடிக்கவும் தண்டிக்கவும் சொல்லி போராடுவது — என முப்பெரும் கடமைகளை நிறைவேற்ற, பாசிச ராஜீவ்—எம்ஜிஆர் கும்பல்களின் ஆசியுடன் இக்கூட்டம்கூலிக்கு அமர்த்தப்பட்டு களத்தில் இறக்கி விடப்பட்டுள்ளது.

மக்கள் குரல், நியூஸ்டுடே பத்திரிக்கைகளின் ஆசிரியர் டி.ஆர். ராமசாமி, தினமலர், மாலைமலர் பத்திரிக்கையின் ஆசிரியர்கிருஷ்ண மூர்த்தி, விடிவெள்ளி, பாரதம் ஆசிரியர் தெள்ளூர் மு. தருமராசன், கோவையிலிருந்து வெளிவரும் நமது இந்தியா, மதுரையிலிருந்து வெளிவரும் மதுரைமணி, சாராய புகழ் ஜேப்பியாரின் பினாமி பத்திரிக்கை தின இதழ், கருணாநிதியின்வலதுகரமாகஇருக்கும் முஸ்லீம் லீக்கட்சியின் தலைவரான அப்துல் சமது ஆசிரியராக இருக்கும் மணிச்சுடர்.

'பிரபல' எழுத்தாளர்கள் வரிசையில் வரும் இந்திரா—ராஜீவ்-ரஷிய எடுபிடி 'கஞ்சா போதை' கதை மன்னன் ஜெயகாந்தன், இவருடைய வாரிசு அறந்தை நாராயணன், இந்துமதவெறி, ஆர்.எஸ்.எஸ் புகழ் தீபம் நா. பார்த்தசாரதி, துக்ளக் சோ, ஓட்டு பொறுக்கும் கட்சிகளைஒன்று விடாமல் சுவை பார்க்கும் சர்வ கட்சி புகழ் க.சுப்பு, குமரி ஆனந்தனின் முன்னாள் அடிவருடி இந்நாள் காங்கிரசு விசுவாசி தெள்ளூர் மு. தருமராசன். 'மாஸ்டர் ஆர் ஆல் சப்ஜெக்ட் அறிவுஜீவி—பி.சி, கணேசன் (வானதி பதிப்பகத்தின் குத்தகை எழுத்தாளர், உடல் ஆரோக்கியமாக இருப்பது எப்படி? நீங்கள் முன்னேற வேண்டுமா? இப்படி ஏரளமான கருத்து கருவூலத்தின் சிந்தனைப் பெட்டகம்)

"அன்னை இந்திரா," "இளஞ்சூரியன் ராஜீவ்" ரசிக சிகாமணிகள், வைஜெயந்திமாலா பாலி, டி.என் அனந்தநாயகி,திண்டிவனம் ராமமூர்த்தி, மரகதம் சந்திரசேகர், தமிழக இளைஞர் காங்கிரசு தலைவர் மோசடி தங்கபாலு (வெளிநாட்டில் வேலை வாங்கித் தருதாக ஏமாற்றியதற்காக கைது செய்யப்பட்டு, வெளியில் வந்தவர்)

காங்கிரசு 'தலைவர்' பழனியாண்டி, காங்கிரசின் 'மூத்த' பொதுச் செயலர் ஜி. கருப்பையா மூப்பனார்; "பெரியவர்," எம். கல்யாணசுந்தரம் (காங்கிரசுகாரர்கள் தோழர் பட்டத்தை எடுத்து விட்டார்கள்!), தா.பாண்டியன்.

—இப்படி ஏகப்பட்ட கூட்டம் தேசீய தமிழ் இளைஞர்(!) பேரவை, தேசீய ஒருமைப்பாட்டு இயக்கம் என்ற புதுப்புது கூடாரங்களின் கீழ் கும்பல்கூடி, இந்திய—இலங்கை உடன்பாட்டை "களங்கப்படுத்தும்" "விஷமி"களுக்கு எதிராக 'உண்மை' விளக்க பிரச்சாரத்தை பரந்து விரிந்த அளவில் பொதுக்கூட்ட மேடைகளிலும், அறைக் கூட்டங்களிலும், பத்திரிக்கைகளிலும் மூச்சுவிடாமல் நடத்துகிறார்கள்.

இந்திய—இலங்கை ஒப்பந்தத்தின் "வரலாற்று சிறப்பு மிக்க" அம்சங்களை விளக்க வந்த இவர்கள், வாலறுந்த நரியாக, ஆப்பசைத்த குரங்காக மாட்டிக்கொண்டு தொண்டை காயும்வரை ஊளையிட்டு திரும்பவும் தொடர்கிறார்கள். "அரசியல் நாகரீகம் தெரியாதவர்கள், கருத்து சுதந்திரத்தையும், விமர்சன சுதந்திரத்தையும் கேடாக பயன்படுத்துகிறார்கள்' என்று மூச்சுக்கு முன்னூறு தடவை எகிறிக் குதித்த இம்மா 'மேதை'கள் தாங்கள் மேடையேறியவுடன் அனைத்து அரசியல் நாகரீகத்தையும் உதறியெறிந்துவிட்டு நிர்வாண அரசியல் நடத்துகிறார்கள். இவர்களுடைய பேச்சில் உண்மையும் இல்லை, விளக்கமும் இல்லை. எல்லாம் சாராய போதை வசவுகள் தான்.

"இலங்கையில் உள்ள மக்களிடம் அமைதியும் அன்பான சகஜ வாழ்க்கையும் நிலவ அமைதிப் படை பாடுபடுகிறது. இந்த உண்மை தெரியாதவர்கள் அமைதிப் படையினர் பற்றி அவதூறு பேசுகின்றனர். இந்தியாவின் மரபு தெரியாதவன் நாகரீகம் தெரியாதவன் இந்த ஒப்பந்தம் பற்றி பேச முடியாது. ஒப்பந்தத்தில் உள்ளது என்ன என்பதை தெரிந்து கொள்ள முடியாது. பள்ளிச் சிறுவர்களை கொண்ட அமைப்பான புலிகளால் இந்த ஒப்பந்தத்தைபுரிந்துகொள்ள முடியாது."

"...அரும்பு மீசைகூட முளைக்காத இந்த அப்பாவி புலிகளை இந்தியாவின் எதிரிகள் சுவீகரித்துக் கொள்ளக் கூடாது என்று நினைத்தோம். அவர்களுக்கு அரசியல் நாகரீகம் கற்றுத்தர விரும்பினோம். அதனால் புலிகளையும்நமக்கு சமமாக நடத்தினோம். ஆனால் அவர்களுக்கு அந்தமரியாதை புரியவில்லை"

"ஜெயவர்தனா, ஜனதா விமுக்தி பெரமுனாவை (ஜெ.வி.பி) ஒடுக்க என்ன நடவடிக்கை எடுக்கிறாரோ, அதே போன்ற நடவடிக்கைகளை பிரதமர் ராஜீவ் தி.மு.க மீது எடுக்க வேண்டும். நாம் இங்கிருந்து கொண்டு ஒப்பந்தத்தை எதிர்க்கும் பிரேமதேசாவை கண்டித்து பேசுகிறோம். உள்ளூரிலேயே நமக்கு துரோகம் செய்பவர்களை விட்டுவிடுகிறோம். இவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" (தேசீய ஒருமைப்பாட்டு இயக்கத்தின் சார்பில் 16.11.87 அன்று சென்னை—மயிலாப்பூர் சீனுவாச சாஸ்த்திரி ஹாலில் ஜெயகாந்தன் பேசிய பேச்சுகளில் சில பகுதிகள் இவை)

"அரும்பு மீசைகூட முளைக்காத", "பள்ளிச் சிறுவர்களை கொண்ட அமைப்பான புலிகளால் இந்த ஒப்பந்தத்தைப் புரிந்து கொள்ள முடியாது", "இந்தியாவின் மரபு தெரியாதவன், நாகரீகம் தெரியாதவன் இந்த ஒப்பந்தம்பற்றி பேச முடியாது" என்கிறார். உண்மைதான்! பெற்ற தாயின் உடல் அங்கங்களை கட்டிலுக்கு கீழ் ஒளிந்துக் கொண்டு ரசித்த இவருடைய "ரிஷி மூலம்" கதை பள்ளி சிறுவனுக்கும், சொந்த கணவனை, சினிமா எம்ஜிஆராக நினைத்து அணைத்து சுகம்கண்ட இவரது "சினிமாவுக்கு போன சித்தாளு" கதாநாயகி அளவு 'நாகரீகம்' வளராதவனுக்கும், ரயில் பிரயாணத்தின்போது முகம்



படிப்பகம்

www.padippakam.com



இலங்கை ஒப்பந்தத்தை ஆதரித்து மதுரையில் இ.காங்கிரஸ் கையெழுத்து வேட்டை தொடங்கிய போது எடுத்த படம். சாக்கடையாகநாறும் ராஜீவின் —இலங்கை ஒப்பந்தத்தையும், அமைதிப் படையையும் பாராட்ட இந்த கழிசடைகள் தேடி ஓடி இருபபதில் வியப்பேதும் இல்லை.

தெரியாத ஒரு பெண்ணிடம் இருட்டில் பலமணி நேரம் வக்கிரமாக நடந்து கொண்டு, இதை "ஒரு இலக்கியவாதியின் அனுபவங்கள்" என்று வெட்கமில்லாமல் எழுதி பணம் பண்ணிய ஜெயகாந்தன் அளவுக்கு 'நாகரீகம்' வளராதவனுக்கும் இந்திய—இலங்கை ஒப்பந்தத்தின் 'உண்மை' தெரிய வாய்ப்பு இல்லைதான்.

சாக்கடையாகநாறும் ராஜீவின் —இலங்கை ஒப்பந்தத்தையும், அமைதிப் படையையும் பாராட்ட இந்த கழிசடை தேடி ஓடி இருப்பதில் வியப்பேதும் இல்லை. சாக்கடைகள் சங்கமிக்கும் போது பெருத்த அளவில் நாறத்தான் செய்யும்.

"...இந்தியா — இலங்கை இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் சர்வதேச பிரச்னைகள் பற்றிய அறிவு உள்ளவர்களுத்தான் இதன் முக்கியத்துவம் புரியும். கிணற்று தவளைகளான தி.மு.கவினருக்கு அது புரியாது. வல்லரசு நாடுகள் நமது பகுதிகளில் நுழைவதை தடுக்கும் ஒப்பந்தம் இது. காளிமுத்து, கருணாநிதி வகையறாவுக்கு இது தெரியாது; புரியாது" "...பொதுவாக அறிவுள்ள எதுவும் இவர்கள் மரமண்டையில் ஏறாது. இவர்களது ஆபாச மண்டையில் இருந்து எழுந்த கருத்துக்கள் அடங்கிய சுவரொட்டிகளை சென்னை தெருவெங்கும் ஒட்டியுள்ளனர். ஒப்பந்தத்தை எதிர்க்கும் வாசகம் அதில் உள்ளது. தேசவிரோதமான இந்த போஸ்ட்டர்களை போலீஸ் எப்படி அனுமதித்தது என்பது தெரியவில்லை.

"சின்ன வயதில் குருவி அடித்த ஒரு பையனுக்காக (பிரபாகரன்) இன்று கருணாநிதி அரசியல்நடத்தி வருகிறார்."

"...உலகில் மிகச் சிறந்த ராணுவமான இந்தியாவுக்கு இந்த 23(?) பொடியன்கள் (புலிகள்) நிபந்தனை போடுவது மோசமான விசயம். அதற்காக தமிழ் நாட்டில் சில பொடியன்கள், போஸ்டர் ஒட்டுதல் நடத்துவது அதைவிட மோசமான விசயம் (மேற் கூறிய கூட்டத்தில் தீபம் நா. பார்த்தசாரதி பேசிய பேச்சுகளிலிருந்துசில பகுதிகள் இவை)

"பொதுவாக அறிவுள்ள எதுவும் இவர்கள் மரமண்டையில் ஏறாது" என்று 'அறிவார்ந்த' முறையில் பிரச்சாரம் செய்ய கிளம்பியிருக்கிறார் இந்த அமெரிக்க எடுபிடி. சர்வதேச பிரச்னைகள்", "வல்லரசு" என்று பெரிய, பெரிய வார்த்தைகளைப் போட்டு ராஜீவின் இலங்கை ஒப்பந்தத்தை மெருகேற்றி, கேட்பவரை பிரமிக்க வைத்துவிடலாம் என்று கிரிமினல் மூளையுடன் மேடையேறி இருக்கிறார்.

5000க்கும் மேற்பட்ட மக்களை படுகொலை செய்த போபால் விஷவாயு, 'விபத்து'க்கு காரணமான அமெரிக்க—யூனியன் கார்பைடு கம்பெனியின் சதிக்குதுணை போகும் ராஜீவ், சொந்த நாட்டுக்குள்ளேயே வல்லரசுகளின்—அதன் பகாசூர கம்பெனிகளின் பிடியிலிருந்து தம்மக்களை பாதுகாக்க வக்கற்ற ராஜீவ், இலங்கை ஒப்பந்தத்தால், வல்லரசுகளின் ஆபத்திலிருந்து இந்திய நாட்டையும், ஈழ மக்களையும் பாதுகாக்க பாடுபட்டிருக்கிறாராம்!

'ஆபாச மண்டையில் இருந்து எழுந்த' 'ஒப்பந்தத்தை எதிர்க்கும் தேச விரோதமான' போஸ்டர்களை போலீஸ் எப்படி அனுமதித்தது என்பது 'தெரியவில்லை' என்கிறார். தீபம் நா. பார்த்தசாரதி போன்ற 'பெரிசு'களுக்கு இந்த சிறிய விசயம் எப்படி தெரியாமல் போய்விட்டது என்று நமக்கு ஆச்சர்யம் அளிக்கிறது.

பிரதமர் ராஜீவின் 'புதிய' இறக்குமதி கொள்கையால், அமெரிக்க 'ஹாலிவுட்'டிலிருந்து சரஞ்சரமாக இறக்குமதியாகும் 'பார்பேரியன் குயின்', 'லோட்ட் கன்' போன்ற ஆங்கில திரைப்படங்களுக்காக ஒட்டப்படும் ஆடையே இல்லாத முழு நிர்வாண பெண்களின் உடல் அங்கங்களை ரசிக்கவே தேவாரம் கும்பல் போலீசுக்கு நேரம் போதவில்லை. அதற்குள் புது ஆங்கிலப் படத்தின் இன்னொரு போஸ்டர் அதன் மேல் ஒட்டப்படுவதால் பழசை காணாமல் அவர்கள் பதறி துடிக்கிறார்கள். அறிவுக்கு உரமூட்டும் இங்கிலீசு போஸ்டர்களை கண்டுகளிக்கவே அவர்களுக்கு நேரம் இல்லாத போது, 'ஆபாச மண்டையிலிருந்து' எழுந்த இந்திய—இலங்கை ஒப்பந்த எதிர்ப்பு போன்ற 'தேச விரோதமான' போஸ்டர்களை எல்லாம் என்ன செய்வதென்று தீர்மானிக்க அவர்களுக்கு நேரம் கிடைக்கவில்லை. இதை உணர்ந்து கொண்ட காங்கிரசுத் தொண்டர்கள் போலீசு வேலையையும் தாங்களே எடுத்துக் கொண்டு இப்போது தெருத் தெருவாக 'தேச விரோத' போஸ்டர் கிழிக்கும் 'தேசபக்த' போரில் குதித்துள்ளனர்.

"இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை உலகமே வரவேற்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்க அதிபர் ரீகன் பாராட்டுகிறார். இங்குள்ள அவரது எடுபிடிகள் எதிர்க்கின்றனர். ரீகனைவிட அதிகம் தெரிந்தவர்கள் போல பேசுகின்றனர்.''

''ராஜீவ் காந்திக்கு அனுபவமில்லை; வயது போதாது என்று தி.மு.கவினர் கூறுகின்றனர். அமெரிக்க பார்லிமெண்டில் பேச ராஜீவை அமெரிக்கன் அழைக்கிறான். அவரைக் குறை சொல்பவர்களை உள்ளூர் சட்டசபையில் கூப்பிட ஆள் இல்லை.''

''டி. வி., ராணுவம், நமது பிரதமர் யாரையுமே நம்பாதே என்று பிரச்சாரம் செய்கின்றனர்.. பிறகு எதற்காக அவர்கள் இங்கு இருக்கிறார்கள் என்று தெரியவில்லை.''

''இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை சி. ஐ. ஏ. தயாரித்தது என்று சொல்கின்றனர். சி. ஐ. ஏ. தயாரித்ததை ரஷ்யா வரவேற்கிறதே, அது எப்படி? ரஷ்யாவை விட இவர்கள் பெரிய கம்யூனிஸ்டா?''

(தேசிய தமிழ் இளைஞர் பேரவை சார்பில், இந்தியாவும், இலங்கை தமிழர் பிரச்சினையும் என்பது பற்றி நவம்பர் 5ந் தேதியன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடந்த விளக்க பொதுக்கூட்டத்தில் கே. சுப்பு பேசிய பேச்சில் சில பகுதிகள் இவை)

ஒப்பந்தத்தைப்பற்றி சம்மந்தப்பட்ட இந்திய—இலங்கை மக்களின் கருத்துக்கள் பற்றி எள்ளளவும் கவலையில்லை இந்த சர்வகட்சிஎடுபிடிக்கு, மாறாக, ''ரீகன் பாராட்டுகிறார்''. ''ரஷியா வரவேற்கிறது'', நீங்கள், எம்மாத்திரம் என்று பேட்டை ரௌடி மாதிரி எகிறி குதிக்கிறார். ராஜீவின் நடவடிக்கைகளுக்கு எதிராக கருத்து கூறும் எவர் ஒருவரையும், சி ஐ.ஏ உளவாளி, வெளிநாட்டுகைக்கூலி என்று குற்றம்சாட்டி தேசபக்த வேடம் பூண்ட இந்தபோலி முற்போக்குகள் அப்பட்டமாகவே, இன்று ரீகனும் கோர்பச்சேவும்தான் எங்கள் பெரிய எஜமானர்கள் என்று வெட்கமில்லாமல் மார்தட்டி மிரட்டுகின்றன. அந்த அளவு நெருக்கடிக்குள் மூழ்கி, துணையின்றி தவிக்கின்றன.

''அபயம் தேடி வந்தவர்கள் அரசியல் செய்யக் கூடாது; இந்திய அமைதிப் படைக்கு எதிரான கருத்துக்களை இங்கிருந்தே கூறிவரும் தளபதி கிட்டுவை உடனே கைது செய்.'' ''இங்கே தங்கி அறிக்கை விட்டுக் கொண்டிருக்கும் கிட்டுவை பிணையக் கைதியாக்கி சிறை வைத்தால் நமது வீரர்களை புலிகள் உடனடியாக விடுதலை செய்து விடுவார்கள். வளர்த்த கடா மார்பில் பாய்கிறது. அதன் கொம்பை உடைக்க வேண்டும்.'' (நவ. 18 அன்று விழுப்புரம் காங்கிரசு கூட்டத்தில் தா. பாண்டியன் பேசிய பேச்சின் சிறு பகுதி இது—விடிவெள்ளி 20—11—87)

நல்லகாலம், மார்க்சிய ஆசான் கார்ல் மார்க்ஸ் ஏற்கனவே இறந்து விட்டதால் தப்பித்துக் கொண்டார். இல்லையானால், 'வாழ்நாள் முழுவதும் பல நாடுகளில் அரசியல் தஞ்சம் கேட்டு வாழ்ந்த அவர் மாவீரன் நெப்போலியன் வாரிசான பதினெட்டாம் புருமேரை எப்படி விமர்சிக்கலாம்?' என்று கேள்வி கேட்டு கார்ல் மார்க்சை தூக்கில் போட கட்டளை பிறப்பித்து இருப்பார் தா. பாண்டியன்.

கடந்த காலங்களில், ஜெயவர்த்தனேவுக்கு எதிராக புலிகள் இங்கிருந்து கருத்து சொன்னது மட்டும் தா. பாண்டியன் காதுக்கு சினிமாப் பாடலாக இனித்திருக்கிறது. 'அமைதி'ப் படைக்கு எதிராக கருத்து சொன்னவுடன்தான் அது அரசியலாக தெரிகிறது.

---

கடந்த காலங்களில், ஜெயவர்த்தனேவுக்கு எதிராக புலிக்ள் இங்கிருந்து கருத்து சொன்னது மட்டும் தா. பாண்டியன் காதுக்கு சினிமாப் பாடலாக இனித்திருக்கிறது. 'அமைதி'ப் படைக்கு எதிராக கருத்து சொன்னவுடன்தான் அது அரசியலாக தெரிகிறது.

---

''வளர்த்த கடா மார்பில் பாய்கிறது, அதன் கொம்பை உடைக்க வேண்டும்'' என்று கோவைப்பழம் மாதிரி சிவந்து போகிறார். ''கடா'' என்று தெரிந்த பிறகும் எதற்கு வளர்த்தார்கள்? ஜெயவர்த்தனேவையும், சிங்கள மக்களையும் குத்திக் குதற வேண்டும் என்பதற்காக! இவர்களை கிழித்தவுடன் தான் கொம்பின் கூர்மையைப்பற்றி அங்குலம் அங்குலமாக விவரிக்கிறார்கள். ஐயோ பாவம்!

இன்னும் அறந்தை நாராயணன், அனந்தநாயகி, தெள்ளூர் தருமராசன், பி.சி. கணேசன் கும்பல்களிடமிருந்து ஏகப்பட்ட ஓலங்கள். ''பாரத பிரதமர் மீதும் இந்திய ராணுவத்தின் மீதும் பொய் பிரச்சாரம் செய்யும் தேசத் துரோகிகளை சிறையில் அடைக்க வேண்டும்'', ''இந்திய அமைதிபடையை அவதூறு செய்ய, சர்வதேச கொள்ளைக்காரர்கள், சமூக விரோதிகள் —கடத்தல்காரர்களுக்கு (புலிகள்) யோக்கியதை இல்லை'', (விடிவெள்ளி 19.11.77) ''பெங்களூரில் இந்தியவிமானத்தை கடத்தபுலிகள் சதி. புலிகளின் வயர்லெஸ் தகவல்'' (மணிச்சுடர் 6.11.87), ''யாழ்பாணத்தில்விடுதலைப்புலிகள் வீடு, வீடாக புகுந்து கெடுபிடி! துப்பாக்கி முனையில், ஒளிந்துக் கொள்ள இடம் கேட்கிறார்கள் (18.11.87, நமது இந்தியா) ''விடுதலை புலிகளுக்கு ஆயுதம் வாங்க வந்தவர் மதுரையில் கைது, 1½ கோடிக்குகடத்தல்தங்கம்விற்றார்'' (8.11.87 மதுரைமணி)

மறுபுறம், ராணுவ அதிகாரிகள் தங்கள் திறமையைப் பறைசாற்ற ஏககாலத்தில் எதிர்செய்திகள் விடுகிறார்கள், ''ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு விடுதலைப்புலிகள் ஆயுதம் கடத்துவது அடியோடு தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டது. (பம்பாயிலிருந்து வெளிவரும் போல்டு இந்தியா 16.11.87)

ஊர் முழுக்க போஸ்ட்டர்கள், நாள்தோறும் பொதுகூட்டங்கள், எடுபிடி செய்தி பத்திரிக்கைகள். இவை இல்லாமல், வானொலி, வானொளி எடுக்கும் அண்ட புளுகு பிரச்சாரங்கள், அனைத்துக்கும் மேலாக, டிசம்பர் மாத முதல் தேதியிலிருந்து, ஈழச் செய்திகளுக்காகவே 24மணி நேரமும் தனியாக ஒரு அலை வரிசை. இவற்றுக்கும் மேலாக ''பெரியவர்'' கல்யாணசுந்தரம் யோசனை—''இந்திய இலங்கை உடன்பாட்டினால் ஈழ மக்களுக்கு என்னென்ன நன்மைகள், உரிமைகள் கிடைத்துள்ளன என்பதுபற்றி போதுமான பிரசாரம் செய்யப்படவில்லை. தமிழ்நாட்டிலும் மற்ற இந்திய மாநிலங்களிலும் இதை ஆதரித்து பிரச்சாரம் செய்தால் போதுமா? இலங்கைக்கு சென்று நாம் பிரச்சாரம் செய்ய வேண்டாமா? ஈழ(!) மக்களுக்குத் தான் இந்த உடன்பாடு பற்றிய முழு உண்மை முதலில் தெரிய வேண்டும். அதற்கு இந்திய அரசு ஏற்பாடு செய்யவேண்டும்'' (முதலில் கூறிய கூட்டத்தில் கல்யாணசுந்தரம் பேசிய பேச்சின் சிறுபகுதி இது)

இந்தியாவின் எதிர்காலத்தையே புலிகள் சூன்யமாக்கிவிட்டதாக, அதனால் இந்திய மக்களுக்கு சொல்லொணா துன்பங்கள் காத்திருப்பது போல பீதி ஏற்படுத்த ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் பிரச்சார பீரங்கிகளை தொடர்ச்சியாக முடுக்கி விட்டுள்ளனர், கொலைகார ராஜீவும், துரோகி எம்ஜிஆரும். தோன்றியுள்ள கூலிப் பிரசங்கிகளும், ஏதோ புதிதாக முளைத்து சில நாட்களில் அழிந்து விடும் காளான்கூட்டம் அல்ல. இந்தி எதிர்பின் போதும், புதிய கல்விக் கொள்கை எதிர்ப்பின் போதும், அதற்கு எதிராகராஜீவ், எம்ஜிஆர் கும்பலின் சார்பில் அரசு ஆதரவுடன்வெளிக்கிளம்பியகும்பல் இது. இன்று ஈழ எதிர்ப்புக்காக 'குப்' என்று பார்த்தீனியம் போல் வெளிக்கிளம்பி, பரந்த அளவில் வேரூன்றி வேலை செய்கிறது. இனிமேலும் இதை உடனடியாக முடமாக்காமல் விட்டு விட்டால், அடிக்கடி அல்ல நிரந்தரமாகவே, பாசிசகும்பலின் அதிகார பூர்வமான ஐந்தாம் படையாக நிலைத்து நின்று கொழுத்து விடும்.

● பச்சையப்பன்



படிப்பகம்

www.padippakam.com

# விமர்சனமும் விளக்கமும்

ஈழ விடுதலைப் போராட்டம் பற்றிய புதிய ஜனநாயகத்தின் செய்திகள் மற்றும் நிலைப்பாடுகள் பரவலான ஆதரவையும் வரவேற்பையும் பெற்று வருகிறது. புதியஜனநாயகத்தின் உண்மையும் துணிச்சலும், உறுதியும் இதன் கருத்துக்களோடு உடன்படாதவர்களிடமும் கூட ஒரு தகுதியான நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

அதேசமயம் இந்திய இராணுவத்தின் இலங்கைஆக்கிரமிப்புக்குப் பிறகு விடுதலைப்புலிகள் அமைப்பு மற்றும் அதற்கு ஆதரவு தரும் தமிழக அரசியல் கட்சிகள் ஆகியவற்றைப் பற்றிய புதியஜனநாயகத்தின் அணுகுமுறை மீது சில தோழர்களுக்கு இன்னமும் சந்தேகங்கள் இருக்கின்றன. ஒன்று, . பாசிசத் தன்மையுடைய விடுதலைப் புலி அமைப்புடன் ஜனநாயகத்தை முன் நிபந்தனையாகக் கொண்டு முற்போக்கு சக்திகள் ஐக்கிய முன்னணி அமைத்து இந்திய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போரிடுவது சாத்தியமா, சரியா? இரண்டு, இந்திய இராணுவத்தின் ஈழப் போரை எதிர்க்கும் கருணாநிதி, வீரமணி, நெடுமாறன் போன்றவர்களை விமர்சிப்பதும், அம்பலப் படுத்துவதும் சரியா?

தமது சொந்த அனுபவத்திலிருந்தும், புதிய சில தகவல்கள் கொடுத்தும் முதலாவது கேள்வியை எழுப்புகிறார் மேலை நாட்டில் குடியேறியுள்ள ஒரு ஈழத் தமிழ்த் தோழர். சீன — லியூ ஷவோகியின் மேற்கோள் ஒன்றைக் குறிப்பிட்டு இரண்டாவது கேள்வியையே விமர்சன முடிவாக எழுதுகிறார் புரட்சிப் பண்பாட்டு இயக்கத் தோழர் ரவிக்குமார். இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

## புலிகளும் புரட்சியாளர்களும்

ஈழத்தமிழத் தோழர் பின்வருமாறு எழுதுகிறார், "புலிகளுடன் ஜனநாயகத்தை முன் நிபந்தனையாகக் கொண்டு முற்போக்கு சக்திகள் ஐக்கியப்பட வேண்டும் என்று எழுதியிருந்தீர்கள். புலிகளின் பாசிசத் தன்மையையும், பதவி வெறியையும் ஸ்தாபன அமைப்பு முறையையும் இன்னும் ஆழமாகப் பார்க்க வேண்டும். இன்று இந்தியாவிடம் எமது மக்கள் இவ்வளவு அடிவாங்கிய பின்பும் இவர்கள் வேறு எந்தக் குழுவையும் இயங்க அனுமதிக்கவில்லை. வேறு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இயங்குவது எனில் தங்களுடன் இணைய வேண்டும் என்கின்றனர். ஈ.பி.ஆர்.எல்.எஃபின் சில தோழர்கள் அந்த அமைப்பின் இந்திய சார்பு காட்டிக் கொடுப்பால் வெளியேறி ஒதுங்கி இருந்தனர். இந்தியப்படை வந்த பின்பு புலிகள் அவர்களைக் கடத்திக் கொன்றனர்.

பிரபாகரனுக்கும் அவரது கும்பலுக்கும் உள்ள பதவி வெறி பற்றி உங்களுக்கு நான் விளக்கத் தேவை இல்லை. ஐக்கியம் சம்பந்தமாக தோழர் மாவோ சொல்கிறார், "எந்தச் சந்தர்ப்பத்திலும் முன்கை எடுப்பு." இது புலிகளோடு ஐக்கியப்படும்போது சாத்தியப்படாது. புலிகளுடன் ஐக்கியப்பட்ட ஈரோஸ் நடத்திய தாக்குதல்களையே புலிகள் உரிமை கோருகிறார்கள். ஐக்கியப்படுவதன் மூலம் புலிகளைத் திருத்தி நல்லமுறையில் மாற்றி அமைக்கலாமா என்றால் அதுதான் இல்லை. ஏனெனில் முன்பு புலியில் இருந்த முற்போக்கு சக்திகள் எல்லோரும் வெளியேறி விட்டனர்.

இப்போது பிரபா தலைமையிலான பாசிஸ்ட்டு கும்பல், லெப்டினன்ட், மேஜர் என்ற தியாகப் பட்டங்களை வாங்க இருக்கும் இளைஞர் கும்பல், சிறுவர் கும்பல்— இதுவே புலிகள். இவர்களது தத்துவம் இனவெறி—இதைத்தவிர வேறு ஒன்றுமேயல்ல. இவர்களோடு நாம் ஐக்கியப்பட்டால் எமது இரகசிய வேலை முறையை அறிந்து அவர்கள் எம்மை நாம் பலம் பெற்றவுடன் அழிப்பார்கள். ஆனால் இந்திய இராணுவத்தோடு இவர்கள் போரிடுவதால் நாம் இவர்களை முன்புபோல அதிகம் எதிர்த்து பிரச்சாரம் செய்யாமல் விட்டுள்ளோம். இது ஒன்றுதான் இப்போது இவர்களுக்காக செய்யக்கூடியது.

முற்போக்கு சக்திகள் தம்மைப் பாதுகாத்துக் கொண்டு இரகசியமான முறையில் முன்னேறுவதே இப்போது எம்முன் உள்ள கடமை. இவர்களோடு ஐக்கியப்பட்டால் ஈரோஸ் சீரழிந்ததுபோல சீரழிய வேண்டியே வரும். இரண்டு பாசிஸ்டுகள் போரிட்டு அழிகிறார்கள். இதில் மக்களைக் காப்பதே முற்போக்கு சக்திகளின் கடமை. அதை எப்படிச் செய்வது? உடனடியாக யுத்தம் நடைபெறும் இடங்களில் தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது எப்படி என்று மக்களுக்கு இரகசியமாகத் தெரியப்படுத்தலாம். ஆயுத ரீதியாக இந்திய இராணுவத்தை எதிர்க்க நாம் தொடங்கும்வரை, புலிகளுக்கு சமமான ஆயுதபலம் எமக்கு வரும் வரை மிகவும் இரகசியமாக புலிகளுக்கும் தெரியாமலேயே வேலை செய்ய வேண்டும். அல்லாவிடில் நீண்டகால நோக்கில் எதுவுமே சாதிக்கப்போவது இல்லை."

ஈழத்தமிழ்த் தோழரது கடிதம் கசப்பான பல உண்மைகளைக் கொண்டிருக்கிறது.

விடுதலைப் புலி அமைப்பின் பாசிச—இனவெறித் தன்மைகளை இனங்கண்டு எதிர்ப்பவர்களில் "புதிய ஜனநாயகம்" முதன்மை இடம் வகிக்கிறது. எனவேதான் புலிகளின் வெறுப்புக்கும் ஆத்திரத்துக்கும் அது இலக்காகியிருக்கிறது. புலிகளைப் போலவே பாசிச, சிங்கள இனவெறி பிடித்த அமைப்புதான் மக்கள் விடுதலை முன்னணி (ஜே வி பி).

ஜே.வி.பி.யில் இருந்து பிரிந்து வந்த ஒரு குழு, பழைய மார்க்சிய லெனினியக் கட்சியிலிருந்து பிளவு பட்டு சிதறிப்போன சில சிறு குழுக்கள், ஈழத்தில் என்.எல்.எஃப்.டி, பி.எல்.எஃப்.டி, தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை ஆகிய சிறு குழுக்கள்— தனிநபர்கள் ஆகியவர்களே இன்றைய முற்போக்கு சக்திகள். அதாவது மார்க்சிய—லெனினிய அடிப்படையிலான புதிய ஜனநாயகப் புரட்சியை நோக்கமாகக் கொண்டவை. இவையும் தெளிவான அரசியல், சித்தாந்தம் மற்றும் கோட்பாடு திட்டத்துடன் இயங்கவில்லை. ஆகவே இலங்கையில் உள்ள முற்போக்கு சக்திகளை ஐக்கியப்படுத்துவதும் ஒரு மார்க்சிய—லெனினியப் பாட்டாளி வர்க்

> சமரசவாதிகளான கேடட்டுகளை, அவர்களின் தலைவர் ஸ்துருவேயை அரசியல் விபச்சாரி என்றும் திரிபுவாதிகளான பிளக்கானவ்வையும் காவுஸ்கியையும் ஓடுகாலிகள் துரோகிகள் என்றும் லெனின் சாடினார். ஆனால் நாம் கருணாநிதி – வீரமணி – நெடுமாறன் கும்பலை கோழைகள், பிழைப்புவாதிகள் என்று சொல்வதைக் கூட இந்தத் தோழர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

கக் கட்சியை உருவாக்குவதும் இன்றியமையாத கடமை.

இப்படிப்பட்ட ஒரு முயற்சியை இலங்கை—இந்திய அரசுகள் மட்டுமல்லாது ஜே.வி.பி மற்றும் விடுதலைப் புலிகளும் எதிர்த்து வருகின்றனர். ஆனால் ராஜீவ்—ஜெயவர்த்தனே ஒப்பந்தம் கைச்சாத்தான பிறகு, இந்தியா இலங்கையில் போய் இறங்கிய பிறகு, குறிப்பாக ஈழத்தில் அது போர் தொடங்கிய பிறகு இலங்கையின் அரசியல் சக்திகளின் சேர்க்கையில் முக்கியமான மாற்றம் நிகழ்ந்துள்ளது. இலங்கை இந்தியாவின் நவீன காலனி ஆகியுள்ளது. இந்திய இராணுவ ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடும் பிரதான சக்திகள் ஜே.வி.பியும் விடுதலைப் புலிகளும்தான். அதிலும் குறிப்பாக நேரடியான போரில் ஈடுபட்டுள்ளவர்கள் புலிகள். அதே சமயம் இந்திய இராணுவ ஆக்கிரமிப்பை எதிர்ப்பதில் முன் சொன்ன முற்போக்கு சக்திகள் எந்த வகையிலும் உறுதி குறைந்தவர்கள் அல்ல. ஜே.வி.பி மற்றும் புலிகளின் படுகொலையினாலும், தடையினாலும் எதிரிக்கு எதிரான போரில் அவை தமதுபங்கைச் செலுத்தமுடியாமல் முடக்கப்பட்டிருக்கின்றன.

இருப்பினும் தேச சுதந்திரத்திற்காகவும், விடுதலை—ஜனநாயகத்துக்காகவுமான போராட்டத்தில் ஊன்றி நிற்கவே முற்போக்கு சக்திகள் முயலுகின்றன. ஈழத்தமிழர் தனது கடிதத்தில் குறிப்பிடுவது போல முற்றிலும் இரகசியமான முறைகளாலும், தற்காப்பு முறைகளினாலும் மட்டுமே முற்போக்கு சக்திகள் பலம்பெற்று விடமுடியுமா? சரியான அரசியல் நடத்தை வழியில்லாத எந்த முயற்சியும் வெற்றி பெறமுடியாது. இந்திய இராணுவ ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடி வரும் ஜே.பி.வி மற்றும் புலிகளின் நடைமுறையோடு சம்பந்தமே இல்லாமல், அவர்களிடமிருந்து அரசியல் முன்முயற்சியைப் பறிக்காமல், பரந்துபட்ட இலங்கை மக்களின் செல்வாக்கைப் பெறவோ, ஆயுத பலத்தைக் கட்டி அமைக்கவோ முடியாது.

ஏனெனில் போராட்டத்தில் நேரடியாக ஈடுபட்டுள்ள அவர்களே நம்பகமானவர்களாக மக்களால் கருதப்படுகின்றனர். "ஆக்கிரமிப்பை எதிர்ப்பதாகக் கூறும் நீங்கள் ஏன் தனியாக நிற்கவேண்டும்? புலிகள் மற்றும் ஜே.வி.பியுடன் சேர்ந்து ஏன் போரிடக் கூடாது?" என்கிற கேள்விகளைத்தான் முதன்மையாக முற்போக்கு சக்திகள் மக்களிடமிருந்து எதிர்கொள்வர். இவற்றுக்குப் பதிலாக அந்த அமைப்புகளின் பாசிச, இனவெறி நடவடிக்கைகளையே சொல்ல முடியும். அதுவும், கூட "ஆக்கிரமிப்புக்கு எதிரான எல்லாருடனும் இணைந்து போரிடத் தயார். ஆனால் ஜே.வி.பியும் புலிகளும் நாங்கள் இயங்குவதையே தடை செய்துஉங்களை அழிக்கும்நடவடிக்கைகளில் ஈடுபடும்போது அது எப்படி சாத்தியம்?" என்கிறரீதியிலே தான்அமையும். அதையேநேர்மறையாக சொல்வதுதான் "ஜனநாயகத்தை முன்நிபந்தனையாகக் கொண்டு ஆக்கிரமிப்புக்கு எதிரான எல்லாருடனும் இணைந்து போரிடுவது!" என்கிற முழக்கம்.

ஜே.வி.பியும், புலிகளும் தமது பாசிச இனவெறி நடவடிக்கைகளைத் தொடர்ந்தாலும் கூட இந்த முழக்கம்தான் அவர்களிடமிருந்து அரசியல் முன்முயற்சியைப் பறிக்கவும், மக்கள் செல்வாக்கை தேடிக் கொள்ளவும், ஆயுத பலத்தைக் கட்டவும் முற்போக்கு சக்திகளுக்கு அவசியமானது. இதனால் புலிகள் தமது வரிக் கோடுகளை அழித்துக்கொண்டு—பாசிச இனவெறிக் கொள்கைகளைக்கைவிட்டு—சைவப் புலிகளாகி விடுவார்கள் என்கிறபிரமை எமக்கில்லை. இந்திய இராணுவ ஆக்கிரமிப்பை எதிர்க்கும் முற்போக்கு சக்திகள்



இயங்குவதற்கான ஜனநாயக உரிமையை ஏற்கும்படி அவர்கள் அரசியல் ரீதியில் நிர்பந்திக்கப்படுவார்கள் என்று மட்டுமே நம்புகிறோம்.

மேலும் புலிகள் பற்றி நாம் மாறா நிலைவாதக் கண்ணோட்டம் கொள்ளக்கூடாது. சக்தி வாய்ந்த இந்திய இராணுவத்தை அவர்கள் எதிர்கொள்வது, யாழ்ப் போரில் கணிசமான அளவு பலவீனப்பட்டுப் போயிருப்பது ஆகிய புறச்சூழ் நிலைகள், தொடர்ந்து தனித்துப் போரிட்டு வெல்லமுடியும் என்கிற அவர்கள் நம்பிக்கையை ஆட்டங் காணச் செய்துள்ளது.

பாசிச எம்ஜிஆரை மட்டுமே நம்பி, கருணாநிதியை உதாசீனப் படுத்தி வந்த புலிகள் கருணாநிதியைத் தேடிஓடி ஆதரவு கோரினர்; ஆக்கிரமிப்புக்கு எதிராக புலிகள் அமைப்பில் சேரும்படி பிற போராளிகளுக்குஅழைப்பு விடுத்தனர். "இந்தியர் ஆக்கிரமிப்பாளர். இலங்கை எங்கள் நாடு! ஈழத்தமிழரும் சிங்களவரும் இலங்கைத் தீவினர்! எங்களுக்குக்கட்டளையிட இந்தியர் யார்?" என்று புலிகளின் துணைத் தலைவர்மாத்தையா கொதிப்போடு கேட்டார். இவையும்கூட புலிகளின் சந்தர்ப்பவாதமான நடவடிக்கைகள் தாம்; அவர்கள் பாசிச, இனவெறிக் கொள்கையில் எப்போதும் போல நிற்கிறார்கள் என்றாலும் போரில் அவர்கள் ஈடுபடும் வரை நேசசக்திகளுடன் ஐக்கியப்படுமாறு மாறி வரும் நிலைமைகள் அவர்களை நிர்பந்திக்கும். பாசிச, இனவெறிக் கொள்கைகளில் அவர்கள் ஊன்றி நிற்க முயற்சித்தால் புலிகளிடையே பிளவு தவிர்க்க முடியாததாகி விடும். அந்த நிலைமைகளில் சாதகமான சக்தியுடன் சேர்ந்து ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடுவதற்கு மேற்கண்டநேர்மறையான முழக்கம் நிச்சயம் உதவும்.

அது மட்டுமல்ல "ஒரே சமயத்தில் இரண்டு எதிரிகளை இரண்டு கைகளாலும் எதிர்த்துப் போரிட முடியாது." "பத்து விரல்களால் பத்து ஈக்களைப் பிடிக்கமுடியாது." எதிரிகளுக்கிடையிலான முரண்பாட்டைப் பயன்படுத்திக் கொள்வதும், பிரதான எதிரிக்கு எதிராக இரண்டாம் பட்ச எதிரிகளுடன் ஐக்கியப்பட்டுப் போராடுவதுமதான்சரியான தந்திரோபாயமாகும். இன்னும் சொல்வதானால், இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கும் அவர்களுடைய அடிவருடிகளான துரோகிகளுக்கும் எதிராக இலங்கை ஆளும் வர்க்கங்களிலேகூட ஒரு பிரிவுடன் ஐக்கிய முன்னணி அமைத்துப் போரிடுவது அவசியமாகிவிடும்.

ஆனால் எந்த நிலையிலும் பாட்டாளி வர்க்க முன்னணிப் படை தனது முன் முயற்சியையும், தனித் தன்மையையும் காப்பதும், ஐக்கியப்பட்டிருக்கும் போதே கூட்டணியின்பிறசக்திகளின்சமரசங்கள் ஊசலாட்டங்களை எதிர்த்துப் போராடவும் தவறக் கூடாது. நமது சொந்தப் பலத்தைப் பெற்றிருக்கும் போதுதான் இதை உறுதி செய்ய முடியும். மார்க்சிய—லெனினிய அடிப்படையை ஏற்கும் புரட்சிகர சக்திகள் ஐக்கியப்படுவதே அதற்கான அவசியமாக உள்ளது.

## பிழைப்புவாதிகளும் புரட்சியாளர்களும்

பு.ப.இ. தோழர் ரவிக்குமார் எழுதிய கடிதம் பின்வருமாறு இருந்தது. (ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த மேற்கோளின் மொழி பெயர்ப்பு எம்முடையது) "நீங்கள் ஈழப்பிரச்சினை தொடர்பாக வெளியிட்டிருந்த சுவரொட்டி பார்த்தேன். பின் வரும் வாசகங்கள் உங்



படிப்பகம்

www.padippakam.com

களுக்குப் பொருந்துவதாகப் படுகிறது.

"நமது தோழர்கள் அவர்களைப் பற்றித் தாங்களாகவே மிகவும் புரட்சிகரமானவர்களாக, மிகவும் ஆர்வமுள்ளவர்களாக அடிக்கடி கருதிக் கொள்ளுகிறார்கள். ஏனெனில் எல்லா ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் யுத்தப் பிரபுக்கள், எல்லா உள்ளூர் குண்டர்கள் மற்றும் மோசமான கொடுங்கோலர்கள், நிலப்பிரபுக்கள், முதலாளிகள் மற்றும் பணக்கார விவசாயிகள், ஆட்சியில் உள்ள அல்லது ஆட்சியில் இல்லாத எல்லா எதிர்ப் புரட்சிக் குழுக்கள் மற்றும் எல்லா மஞ்சள் தொழிற்சங்கங்கள் ஆகிய எல்லா எதிரிகளையும் தூக்கி எறிவதில் இறங்கியிருக்கிறார்கள்; அவர்கள் 'எந்த சமரசத்திற்கோ, சலுகைகளுக்கோ' நிற்கவில்லை.

எல்லாவற்றையும் தூக்கியெறிய விரும்புகிறார்கள்; ஆனால் யதார்த்தத்தில் அவர்கள் எதையும் தூக்கியெறிய முடியாது. அதன் விளைவாக நம்முடன் தற்காலிகமாகக் கூட்டுறவாடக் கூடிய நட்பு சக்திகளையும் அவர்கள் நிராகரித்தார்கள்; அவ்வாறு செய்வதன் மூலம் அவைகளைப் பிற்போக்குமுகாமின் பக்கம் தள்ளிவிட்டார்கள். நமக்கு எதிராகத் தனது நட்பு சக்திகளைத் திரட்டி உறுதிப்படுத்திக் கொண்டு மொத்தத்தில் தனது பலத்தைக் கூட்டிக் கொள்வதற்கு நமது எதிரிக்கு இது உதவியது."

—லியூ ஷாவோகி

(தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் பக் 39—40)

இந்திய ராணுவம் யாழ்ப் போரைத் தொடுத்தவுடன் புதிய ஜனநாயகம் சார்பாக ஒரு சுவரொட்டி வெளியிடப்பட்டது. அதில் இரண்டு முழக்கங்கள் பாசிச ராஜீவ் கும்பலின் ஈழப் படுகொலைக்கும் இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்குமெதிரானவை. மீதிஇரண்டும் பின்வருவன!

"துரோகி எம்ஜிஆரின் மோசடிகளை, அவரது எடுபிடி காளிமுத்துவின் சவடால்களை நம்பாதீர்! இலங்கையின் மீது இந்தியாவைப் படையெடுக்கச் சொன்ன, இந்திய இராணுவத்தின் ஈழ ஆக்கிரமிப்பை எதிர்க்கத் துணியாத கோழைகளான கருணாநிதி, வீரமணி—நெடுமாறன் கும்பலின் மழுப்பல்களை நம்பாதீர்!"

இப்போது எம்ஜிஆரின் துரோகத்தனம் அம்பலமாகிவிட்டது. காளிமுத்துவுக்கும் வாய்ப்பூட்டு போட்டாகி விட்டது. அவரும் வாலைக் குழைத்துக் கொண்டு எம்ஜிஆர் காலடியில் படுத்துக் கொண்டார். ஆனால் இந்த உண்மையை முன்கூட்டியே வைத்தது பரவலான வரவேற்பைப் பெற்றது.

தோழர் ரவிக்குமாருக்கு இதுவும் கூட தவறான முழக்கமாகத் தெரிகிறதோ என்னவோ தெரியவில்லை. ஆனால் கருணாநிதி, வீரமணி, நெடுமாறன் முழக்கத்துக்குத்தான் முக்கியமாக அப்படி எழுதியிருப்பார் என்று கருதி பதிலளிக்கிறோம். வெவ்வேறு அணியில் இருப்பதைத் தவிர காளிமுத்துவுக்கும் மற்றவர்களுக்கும் அவ்வளவு வேறுபாடுகள் இருப்பதாக நாம் கணிக்கவில்லை.

சுயநலமே ஆளும் வர்க்கங்களின் அடிப்படை நோக்கம் எனினும் அவற்றின் அரசியல் பிரதிநிதிகள் காந்தியம், இந்து ராஷ்ட்டிரம் போன்ற வடிவமெடுத்துக் கொண்டு அரசியல்நடத்துவார்கள். அவர்களில் சிலர் சுயநலத்தையே—பிழைப்பு வாதத்தையே அரசியல் கொள்கையாக்கிக் கொள்வதுமுண்டு. இந்த வகையைச் சேர்ந்த சுயநல, அரசியல் பிழைப்புவாத கட்சிகள்தாம் கருணாநிதி, எம்ஜிஆர், வீரமணி, நெடுமாறன்



தலைமையிலானவை. அதாவது பிழைப்பு வாதத்திற்கு ஏற்ப கொள்கைகளைத் தீர்மானிப்பவர்கள். தமிழ் இன—மொழி உணர்வைக்கூட பிழைப்பு வாதத்திற்குத்தான் பயன்படுத்துகின்றனர். பிழைப்பு வாதத்துக்கு ஆபத்தில்லாத வகையிலேயே தமது அரசியலையும் போராட்டங்களையும்வகுத்துக் கொள்ளும் இவர்கள், எப்போதுவேண்டுமானாலும் துரோகமிழைத்து எதிரிகளிடம் சரணடைந்துவிடும் அபாயமிக்கவர்கள்.

களத்தில் நின்று போராடும் புலிகளிடம் வைக்கும் அணுகுமுறையை இவர்களிடம் வைக்க முடியாது. புலிகள் எதிரிக்கு எதிராக நின்று போரிடுபவர்கள். ஆனால் தமிழக அரசியல் பிழைப்புவாதிகள் செய்வதோ வேறு வகையான நடவடிக்கை. அதாவது எதிரிக்கு எதிராக விழிப்புற்றுப் போராட முன்வரும் மக்களை இடைமறித்துத் தாமும் எதிர்ப்பதாகக்கூறி தவறான முழக்கத்தை முன்வைத்துத் திசை திருப்பி இறுதியில் எதிரியிடமே சமரசமடைய வைக்கிறார்கள். எனவேதான் இந்த பிழைப்புவாதக் கட்சிகள் போர் நிறுத்தம் மட்டுமே கோருகின்றன.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்பை எதிர்க்கத் துணியவில்லை. ஈழத்தமிழர்களை இந்திய இராணுவம்படுகொலைசெய்வதுகூட ஜெயவர்த்தனேயின் சூழ்ச்சி—சிங்களவர் தந்திரம், சிங்களவர் நம்பமுடியாத கொலை வெறியர்கள்—ராஜீவையே கொல்ல முயன்றவர்; ஒப்பந்தத்தையும், இந்திய இராணுவம் இலங்கையில் இருப்பதையும ஏற்கிறோம்; இந்திய இராணுவத்துக்கும் ராஜீவுக்கும் களங்கம் ஏற்பட்டுவிடக் கூடாதே என்பதற்காக போரை நிறுத்தக் கூறுகிறோம்—இந்தப் பாணியிலேதான் இந்தப் பிழைப்புவாதிகளின் கூச்சல் இருக்கிறது. இந்த நிலைப்பாடுகள் எல்லாம் மழுப்புவதும் சமரசப்படுத்துவதும் அல்ல "கலைஞரின் ராஜதந்திரம்" என்கிற முறையில் நியாயப்படுத்துவதற்கென்றே பழக்கப்பட்ட அணிகளைத்தான் வைத்திருக்கிறார்கள்.

எனவே இந்தியாவின் ஈழப் போரை எதிர்க்கிறார்கள் என்பதற்காக தமிழக அரசியல் பிழைப்புவாதிகளை விமர்சிக்காமல், அம்பலப்படுத்தாமல் இருப்பது அவர்களின் சமரசவாதக் கருத்துக்கள் ஏகபோகமாக மக்களிடம் போய்ச் சேருவதை அனுமதிப்பதாகும்! எதிரிக்கு எதிரான நமது பிரதான தாக்குதல் திசைவழிஇம்மாதிரியான சமரச சக்திகளை அம்பலப்படுத்தித் தனிமைப் படுத்துவதுதான்! இதை எந்த அளவு வெற்றிகரமாகச் சாதிக்கிறோமோ அந்த அளவு எதிரிக்கு எதிரான போராட்டம் கூர்மையடைகிறது! இதுவே மார்க்சியலெனினிய அரசியல் யுத்த தந்திரம் மற்றும் போர்த்தந்திரங்களின் உயிராதாரமான விதியாக இருக்கிறது.

ஜாருக்கு எதிரான புரட்சியில் தாமும் ஜாரை எதிர்த்து ஜனநாயகப் புரட்சிக்காகப் போராடுவதாகக் கூறிய முதலாளித்துவக் கட்சிகளையும், சோசலிசப் புரட்சியில் தாமும் சோசலிசப் புரட்சிக்காகப் போராடுவதாக கூறிய குட்டி முதலாளித்துவ சமரசவாதிகளையும் ருஷ்யக் கம்யூனிஸ்டுகள் ஈவிரக்கமின்றி அம்பலப்படுத்தி தனிமைப் படுத்தினர். அப்போது எதிரியைவிட அதிகமாக 'நட்பு' சக்திகளைத் தாக்குவதாக போல்ஷ்விக்குகள் மீது சிலர் குற்றஞ்சாட்டினர். ஆனால் அவ்வாறு செய்திராவிட்டால் மக்கள் எதிரியை இனங்கண்டு கொள்ளவோ, புரட்சியில் நாம் வெல்லவோ முடியாமற் போயிருக்கும் என்று சொன்னார் ஸ்டாலின்.

இதைக் கோட்பாடு ரீதியில்



படிப்பகம்

www.padippakam.com

ஏற்றுக் கொள்ளும் தன்மை முற்போக்கு இளைஞர் அணித் தோழர் இரா. சாத்தையன் செயலுக்குவரும்போது சமரச சக்திகளிடம் நமது அணுகுமுறை 'மென்மையாக' இருக்க வேண்டுமென்பதை வலியுறுத்துகிறார்.

"நாம் நமது நிலைப்பாட்டிலிருந்து எம்ஜிஆர், கருணாநிதி, வீரமணி, நெடுமாறன் ஆகியோர் அனைவரும் சமரசவாதிகளென்றும் தமிழின எதிரிகளென்றும் வரையறுத்துள்ளோம். இதை மக்கள் தங்கள் 'சொந்த நடைமுறை அனுபவத்தின்' மூலம் கண்டுகொள்ளச் செய்யும் வகையில் திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதில்தான் புரட்சியாளர்களின் திறமையே அடங்கியிருக்கிறது. இந்திய மக்களின் எதிரியான ராஜீவ் கும்பலுக்கு எதிரான போராட்டத்தில் மேற்சொன்ன சமரசவாதிகளைத் தனிமைப்படுத்த அவர்களது செல்வாக்கின் கீழுள்ள உண்மைத் தொண்டர்களை நம்பக்கம் வென்றெடுக்க 'திட்ட வகைப்பட்ட நிர்பந்தத்துக்கு' உள்ளாக்கும் வகையில் திட்டங்களை முன் வைக்க வேண்டும். இதை விடுத்து ஈனப் பிறவிகள், கோழைகள், பிழைப்புவாதிகள் என்று எழுதிவிட்டால் அவர்களை எப்படி ஐக்கிய முன்னணிக்குக் கொண்டு வரப் பேசுவீர்கள். இப்படித் திட்டி எழுதுவது இவர்களைப் பாதிக்கவில்லை. அல்லது இதைக் கண்டு பயப்படுவதில்லை இவர்கள். ஆனால் திட்ட வகைப்பட்ட நடவடிக்கையைக் கண்டு அஞ்சுகின்றனர்."

இதற்கு சாதாரணமாக 'மத்திய அரசே, அனைத்து மொழிகளையும் ஆட்சிமொழியாக்கு! தமிழை ஆட்சிமொழியாக்கப் போராடுவோம்!' என்று முழக்கம் வந்ததைக் குறிப்பிடுகிறார். "இச்சமயத்தில் 'துரோக ஒப்பந்தம் ஒழிக! தமிழக மக்களே, ராணுவத் தலையீட்டை எதிர்ப்போம்' என்று முழங்கும்போது இவர்களோ துரோக ஒப்பந்தம் ஒழிக! என்பதோடு நிறுத்திக் கொண்டார்கள் பல தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்ட நிலையிலும், பல நூறு மக்கள் கொன்று குவிக்கப்பட்ட நிலைமையிலும் இந்திய அரசே போர் ஓய்வு செய்து கொள்! என்று கத்துகிறார்களே ஒழிய ராணுவத்தை வாபஸ் வாங்க போராட—பேசத் தயக்கங் காட்டுவதன் மூலம் இவர்களது உண்மை நிலையை அம்பலப்படுத்த மேற்சொன்ன நமது முழக்கம் போதுமானது" என்று எழுதுகிறார் தோழர் சாத்தையன்.

இவர் குறிப்பிடுவது போல ராணுவத்தை வாபஸ் வாங்க போராட – பேச இந்த பிழைப்புவாதிகள் 'தயக்கங்காட்டவில்லை' தாங்களே இந்திய இராணுவத்தை திருப்பி அழைக்கக் கோரவில்லை என்று மிகத் தெளிவாக திரும்பத் திரும்ப கூறுகின்றனர். (பார்க்க: கருணாநிதியின் கோவை பேட்டி) மனித சங்கிலி போராட்டத்தில் 'போர் நிறுத்தம்' தவிர வேறு எந்த முழக்கமும் போடக் கூடாது என்று தமது அணிகளுக்குக் கண்டிப்பான உத்தரவு போட்டுள்ளனர்.

அடுத்து, தோழர் சாத்தையன் திட்டவகைப்பட்ட முழக்கம் என்று குறிப்பிடுவதை விடுத்து வெறுமனே அவர்களை திட்டிக்கொண்டிருக்கவில்லை, புதிய ஜனநாயகம். ராஜீவ்—ஜெயவர்த்தனே ஒப்பந்தம் கையெழுத்தான, இந்திய இராணுவம் ஈழ மண்ணில் கால் வைத்த மூன்றாம் நாளே வெளிவந்த புதிய ஜனநாயகத்தின் தலையங்கத்தைப் பாருங்கள்! சமரசவாதிகளிடம் காட்டும் அக்கறை கூட இவர்களுக்குத் தோழமைப் பத்திரிக்கை மீது இல்லையோ என்று கூட சந்தேகம் எழுகிறது. பிறகு வீண்பழி போடுவதில் ஏன் ஈடுபட வேண்டும்?



அப்புறம், இவர்களது உண்மை நிலையை அம்பலப்படுத்த 'ராணுவத்தைத் திரும்பப் பெறு!' என்கிற முழக்கம் மட்டுமே போதுமானதல்ல. ஏனெனில் ஜனதாக் கட்சி கூட இந்த முழக்கத்தை முன்வைத்திருக்கிறது. அதன் பாண்டி எம். எல். ஏ. தலைமையில் ராணுவ மந்திரிக்குக் கறுப்புக் கொடி காட்டி அவர்கள் கைதாகினர். எனவே சரியான முழக்கத்தோடு இந்தச் சமரசவாதிகளது மழுப்பல்களையும், பித்தலாட்டங்களையும் தோலுரித்துக் காட்ட வேண்டியுள்ளது இல்லையானால் 'நாங்கள்தான் சரியாகச் சொல்லுகிறோம்! பாருங்கள் இவர்கள் ராணுவத் தலையீட்டையே எதிர்க்கிறார்கள்! எல்லோரும் எங்களையே ஆதரிக்கிறார்கள்' என்று திரித்துச் சொல்லிப் பிரச்சாரம் செய்வார்கள். ஏற்கனவே, மற்றவர்கள் ஏற்பாடு செய்ய சென்னை மனித சங்கிலி போராட்டத்தில் பங்கேற்க ஒப்புக் கொண்ட கருணாநிதி கட்சி, பின்னர் முழுமையாக அதை ஆக்கிரமித்து, அறிவிப்புகள் செய்து தம்முடையதாக்கிக் கொண்டது. தங்கள் கருத்துடன் உடன்படாத தினமணி, கல்கி, ஆனந்தவிகடனில் இருந்த தமக்கு சாதகமான கருத்துக்களை மட்டும் எடுத்துப் 'பாருங்கள்! இவர்களே இப்படிச் சொல்கிறார்கள்' என்று ஆதாயம் தேடிக் கொள்ளுகின்றனர், முரசொலியும் விடுதலையும்.

பிழைப்பு வாதத்தையே அரசியலாகப் பேசுவதற்குப் பயிற்றுவிக்கப்பட்ட அணிகளைக்கொண்ட கட்சிகளை நாம் எதிர்கொண்டுள்ளோம். எனவே வெறுமனே முழக்கம் மட்டும் போதாது. அத்துடன் அவர்களின் பித்தலாட்டங்களையும் மழுப்பல்களையும் கையும் களவுமாகப் பிடித்து அம்பலப்படுத்த வேண்டும். புரட்சிகர அரசியல் மேலாண்மையை நிறுவ வேண்டுமானால் இது அவசியம் செய்ய வேண்டிய கடமையாக உள்ளது. இக் கடமையே ஒரு மக்கள்திரள் பத்திரிக்கையில் வடிவமெடுக்கும்போது கோழைகள், பிழைப்புவாதிகள் போன்ற அடைமொழிச் சொற்கள் அவசியமாகின்றன. இவை வெறுமனே திட்டுவதல்ல. அவர்களின் அரசியல் குணத்தைச் சொல்வதாகும். இல்லையானால் வெறும் வரட்டுத்தனமான கோட்பாட்டுக் கட்டுரையாகிவிடும்.

அதுமட்டுமல்ல, பிழைப்புவாதிகள் என்பது ஒரு அரசியல் வரையறுப்பு ஆகும். பாசிச ராஜீவ் என்று நாம் எழுதி வருவதைக்கூட இந்தத் தோழர்கள் முன்பு தவறென்று சொன்னார்கள். முதலில் 'பாசிசம்' என்ற வரையறுப்பு இந்த நாட்டுக்குப் பொருந்தாது என்றார்கள். பிறகு 'பாசிசம்' என்கிற அந்நியச் சொல்லை ஏன் பயன்படுத்த வேண்டும், மக்களுக்குப் புரியாது என்றார்கள். இப்பொழுது பாசிச ராஜீவ் என்பது குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் கூட பிரயோகிக்கும் பதமாகிவிட்டது. அதேபோல நாம் வரட்டுவாதிகள் என்று நிரூபிப்பதற்காகக் கடந்த 6, 7 ஆண்டுகளாக இந்தத் தோழர்கள் முயலுகிறார்கள். நமது அணுகுமுறைக்கு மாறாக தமது நடைமுறை மூலம் பெற்ற—மிகவும் மென்மையான அணுகுமுறையினால் திரட்டியுள்ள நேச சக்திகளின்—அனுபவத்தைச் சொல்வார்களானால் ஏற்றுக் கொள்ள நாம் தயாராக உள்ளோம். ஆனால் நமது அனுபவமோ வேறு. கறாரான அரசியல் நிலைப்பாடுகள் பிழைப்புவாதக் கட்சிகளைத் தனிமைப்படுத்தி நேர்மையான அணிகளை வென்றெடுக்க முடிந்திருக்கிறது. புதிய ஜனநாயகத்தின் தகுதி நிலைநாட்டப்பட்டிருக்கிறது.

— ஆசிரியர் குழு
புதிய ஜனநாயகம்



படிப்பகம்

நினைவிருக்கிறது! சில ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா வந்திருந்த ஈழத்தோழர்கள் நம்மிடம் சொன்னார்கள், "எங்கட நாட்டின் புரட்சி இந்தியப் புரட்சியின் வெற்றியில் தங்கியிருக்கு. இலங்கை ஒரு சின்ன நாடு. இங்கபுரட்சி வெடித்தா ஏகாதிபத்தியவாதிகள் அதைச் சகிச்சிக்க மாட்டாங்க. 71லே ஜே.வி.பியை செஞ்சது போல அடக்கிருவாங்க."

அப்போது நாம் சொன்னோம், "இல்லை, தோழர்களே! நீங்கள் உங்கள் சொந்தக் காலில் நில்லுங்கள். ஆயுதபலம் மட்டும் போதாது—சரியான அரசியல், மக்கள் பலத்தைக் கொடுக்கும். மக்கள் பலமும், சரியான அரசியலும் இருந்தால் ஆயுத பலத்தைப் பெறுவது சுலபம். பிறகு எவ்வளவு சிறிய நாடும் எவ்வளவு பெரிய நாட்டையும் வென்றுவிடமுடியும். கம்பூச்சியாவைப் பாருங்கள். உலகிலேயே அதிக பலம் வாய்ந்த அமெரிக்காவை எதிர்த்துப் போரிட்டு வென்றார்கள். இதோ! வியத்நாமின் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போரிடுகின்றனர். உலகை ஆட்டிவைத்த முசோலினியை எதிர்த்து உலகிலேயே சிறிய நாடுகளில் ஒன்றான அல்பேனியா போரிட்டு வென்றது."

ஆனாலும் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. நிகழ்ச்சிகள் வேகமாக நடந்தேறின. 1983 ஜூலை இனப்படுகொலை நடந்தது. பிறகு ஈழவிடுதலை இயக்கம் ஆயுதப் போராட்டமாக வெடித்தது. ஈழப் போராளி குழுக்களின் திடீர் வளர்ச்சியும் தமிழ் தேசிய இனவெறி அரசியலும் முன்னுக்கு வந்தன. அவற்றின் பாதிப்புக்கு ஆளான ஈழத்தோழர்கள் தொலைநோக்குப் பார்வையின்றி, அரசியல் முன் முயற்சியும் மக்கள் பலமும் பெற முடியாமல் சிறிய குழுக்களாகவே இருந்தனர். ஆனாலும் ஈழவிடுதலை இயக்கத்துடன் தம்மை இணைத்துக்கொண்ட அவர்களை ஈழத்தில் இயங்கவிடாமல் பிரபாகரனின் புலிகள் விரட்டினர்.

இப்போது நிலைமைகள் வெகுதூரம் மாறிவிட்டன. இந்தியப் புரட்சியைத் துரிதப்படுத்தும் உந்துசக்தியாக ஈழவிடுதலை இயக்கம் விளங்குகிறது. ஈழமக்களின் தியாகம் வீண் போகாது. அவர்கள் இந்திய ஆக்கிரமிப்பு, சிங்களப் பேரினவாதம் ஆகிய இரண்டையும் எதிர்த்துப் போரிடுகிறார்கள். இந்திய அரசின் ஜனநாயகம், அகிம்சை, பஞ்சீலக் கொள்கைகள், இந்திய இராணுவத்தின் உண்மையான தன்மைகள், குறிப்பாக ராஜீவ் கும்பலின் பாசிசத் தன்மைகள் பற்றி நாம் பல ஆண்டுகள் கடும் முயற்சியினால் இந்திய மக்களுக்கு உணர்த்த வேண்டியவைகளைத் தம் தியாகப்போரினால் நடைமுறை ரீதியாக ஈழமக்கள் நிரூபித்துக் காட்டுகிறார்கள். அதுமட்டுமல்ல பல்வேறு அரசியல் சக்திகளும் எங்கே நிற்கிறார்கள் என்று படம் பிடித்துக் காட்டுகிறார்கள். கவர்ச்சி முழக்கங்களால் மூடு திரை போட்டுக் கொண்டிருந்தவர்களின் அருவருக்கத்தக்க முகங்கள் தெரிகின்றன.

இந்தியமக்கள் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டவர்கள். இந்திய மக்கள் அத்தனைபேரும், எப்போதும் தேசிய வெறியில் மூழ்கிப்போய் இந்திய ஆக்கிரமிப்பை ஆதரித்துக் கொண்டிருக்கமாட்டார்கள். வியத்நாம் ஆக்கிரமிப்பை எதிர்த்து அமெரிக்க மக்கள் ஆர்த்தெழுந்தவைப் போல விழித்தெழுவார்கள். இந்திய இராணுவமேகூட தனது கட்டுப்பாட்டை நிலைநிறுத்த முடியாது. தனது இழப்புகளைக்கண்டு பீதியுற்ற இந்திய இராணுவத்தினர் ஈழமக்கள் மீது பாய்ந்து கடித்துக்

# ஈழம்: சிந்தும்ரத்தம் வீண்போகாது!





விடுதலைப்புலிகளிடம் ஆயுதங்களைக் கைப்பற்றுவதாக சொல்லிக் கொண்டு அப்பாவித் தமிழர்கள்மீது இந்திய ராணுவம் நடத்திய தாக்குதலின் விளைவாக கைகால்களை இழந்து மருத்துவ மனையில் வாடும் ஈழத்தமிழ் மக்களின் படங்கள்!

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

குதறியது. உண்மைதான். ஆனால் மிகமெல்லிதான கோடுதான் அவர்களைத் தடுத்து நிறுத்துகிறது. ஈழமக்கள் மீது ஏற்றப்பட்ட கவச வண்டிகளை உழைக்கும் மக்கள் மத்தியிலிருந்து வந்தவர்கள் தமது ஆணையாளருக்கு எதிராகவேகூட திருப்புவரர்கள். வியத்நாமில் ''மைலாய்''படுகொலை நடத்தியது அமெரிக்க ராணுவம். ஆனால் அதன் வீரர்களில் பலர் தமது ஆணையாளர்களையே சுட்டுவீழ்த்தியதை, இரகசியமான வழிகளில் படையைவிட்டுத் தப்பி ஓடியதை அறிவோம். போதைப் பொருட்களுக்கும், விபச்சார வாழ்வுக்கும் அடிமையானதை அறிவோம்.வியத்நாம் ஆக்கிரமிப்பு அமெரிக்க சமுதாயத்தில் நிரந்தரமான வடுவை ஏற்படுத்தி விட்டது. கற்பனையான ''ராம்போ''களை உருவாக்கி அதைத் துடைத்துவிட யுத்த வெறியன் ரீகன் முயலுகிறான்.

இந்த நிலை இந்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கும் வரும். தனது சகோதரன் ஈழப்போரில் கொல்லப்பட்டான் என்கிற செய்தி கேட்டு கொழும்பு கடைவீதியில் கண்ணை மூடிக்கொண்டு இயந்திரத் துப்பாக்கில் குண்டுமழை பொழிந்தான் ஓர் இந்திய வீரன். மூன்று முஸ்லிம்களும் மூன்று சிங்களவரும் ரத்த வெள்ளத்தில் வீழ்ந்து மாண்டனர். இது ராஜீவ்–ஜெயவர்த்தனே கும்பலுக்கு ஒரு எச்சரிக்கைதான். இம்மாதிரியான விபரீதங்கள் தொடரும். வியத்நாமில் போரிட்ட அமெரிக்கப் படைவீரர் டாக்டர் கிளமன்ஸ் இப்போது எல்சால்வடார் புரட்சியாளர்களுடன் சேர்ந்து விடுதலைப் போருக்கு உதவுகிறார். இந்திய இராணுவத்திலிருந்தும் இம்மாதிரியான வீரர்கள் உருவாகி ஈழ விடுதலை இயக்கத்தில் இணைவர்.

ஈழ மக்களின் துன்ப துயரங்களுக்கு மத்தியிலும் இது எவ்வளவு ஆறுதல் அளிக்கக் கூடியதாக இருக்கும் தெரியுமா? மிருகத்தனமான போரின் மூலம் ஈழ மக்களை ஒடுக்கிவிட முடியும் என்று ராஜீவ்—ஜெயவர்த்தனே கும்பல் கனவு காணுகிறது. அளவுக்கு மீறிய துன்ப துயரங்கள் நீண்ட காலத்திற்கு நீடிக்கும்போது அந்த அவலங்களுக்கு மத்தியிலே மக்கள் வாழப் பழகிப் போகிறார்கள். இடையறாத தாக்குதலுக்கும், இழப்புக்கும் மத்தியில் எல்சால்வடார், நிகாராகுகா, கம்பூச்சியா, எரிட்டீரியா, ஆஃப்கான் மக்கள் வாழ்ந்து வருவது போல, இந்த அவலங்களுக்கு மத்தியிலேயே அவர்கள் இசை பயில்கிறார்கள்; இலக்கியம் படைக்கிறார்கள்; காதலும் மணவாழ்க்கையும் பிறக்கிறது. விளையாட்டும் கல்வியும் நடக்கிறது. இழப்பும், துயரங்களும் அவற்றோடு இணைந்தே வாழ்கின்றன. போர்கால நிலைமைகளும், புரட்சிகர லட்சியமும் அவர்களிடையே ஒரு கூட்டுத்துவ நேசப் பிணைப்பை ஏற்படுத்தும்.

இருட்டிலே நீண்டநேரம் இருப்பவன் அதிலும் கொஞ்சம் பார்வை பெறுவது போல, நடமாடுவதைப் போல பழகிக் கொள்வார்கள். இத்தனையும் இறுதியில் பெறப்போகும் விடுதலை, சுதந்திரம், ஜனநாயகத்துக்கான தியாகம். அதன் அருமையை உணரமுடியாத, கொஞ்சமும் உழைப்பின்றி ஆட்சி உரிமையை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள ஆளும் கும்பலோ அதிகார மமதை, ஆதிக்க வெறியிலே கிடந்து குதிக்கிறது.''ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு நிபந்தனையின்றி சரணடைய வேண்டும். இந்திய—இலங்கை ஒப்பந்தத்தை ஏற்று அமுல்படுத்த வேண்டும். அப்போது தான் போர் நிறுத்தம்—பொதுமன்னிப்பு'' என்று அடாவடித்தனமாகப் பேசுகிறது. போராளிகளை நிராயுதபாணிகளாக்குவதற்கும், அமைதியை நிலைநாட்டுவதற்கும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்குமான பணியில் இந்திய இராணுவம் ஈடுபட்டிருப்பதாகப் புளுகுகிறது.

---

அறிந்து கொள்ள....

**ஈழத்திற்கு மின்சார, தொலைபேசி ஊழியர்களையும் ஈழ மக்களுக்கு கல்வி புகட்ட 500 ஆசிரியர்களையும் இப்போது அனுப்புகிறது. இவர்களுக்கு ஊக்க ஊதியத்தோடு பல சலுகைகளை அறிவித்துள்ளது. இவற்றை ஏற்று ஈழம் போவது துரோகமாகும். ஈழ—இந்தியமக்கள் மன்னிக்க மாட்டார்கள்!**

---

ஜனநாயகபூர்வமான முறைகளில் அல்லாது பாசிச முறைகளில் ஒப்பந்தத்தைத் திணிப்பதானது அதன் உள் நோக்கங்களை மக்கள் புரிந்து கொள்ளவே உதவும். ஈழ மக்களைப் படுகொலை செய்து கொண்டே அமைதி மற்றும் நிராயுதபாணிகளாக்குவது பற்றிப் பிரசங்கம் செய்வது ஆயுதங்களின் முக்கியத்துவத்தை மக்கள் புரிந்து கொள்ளவே உதவும். ''துப்பாக்கி குழாயிலிருந்து அரசியல் அதிகாரம் பிறக்கிறது'' என்கிற உண்மையை அவர்கள் புரிந்து கொள்வார்கள். அப்புறம் ஆயுதங்களை ஒப்படைப்பதைப் பற்றிய பேச்சுக்கே இடமிருக்காது; புதிது புதிதாக ஆயுதங்களைத் தூக்குவதற்கான முயற்சிகளே நடக்கும்.

இதையெல்லாம் புரிந்துகொள்ளும் அறிவு ஆக்கிரமிப்பாளர்களுக்குக் கிடையாது. அறிவைவிட ஆத்திரமும், முட்டாள்தனமுமே, அவர்களிடம் விஞ்சி நிற்கும். அதன் விளைவாக மூர்க்கத்தனமும் அற்பமுமான நடவடிக்கைகளில் ஈடுபடுவர். அதற்கு ஏற்கனவே பல உதாரணங்கள் உண்டு. புலிகள் யுத்தக் கைதிகளை விடுதலை செய்தபோது இந்திய இராணுவம் எதிர்ப்பிரச்சாரத்திற்காக சில அகதிகளை தயாரித்து வந்தது. அவர்கள் எதிர்ப்பக்கம் சேர்ந்து கொண்டு நிருபர்களிடம் உண்மைகளைச் சொல்லத் துவங்கியதும் இராணுவம் குறுக்கிட்டு அவர்களை வாயடைத்து இழுத்துப்போனதும், புலிகளிடம் பேசவிடாது நிருபர்களைத் தடுத்தது, அவர்களை அச்சுறுத்தி விரட்டியதோடு புலிகள் கொடுத்த புகைப்படங்களைப் பிடுங்கிக் கொண்டனர்.

யுத்தக் கைதிகள் விடுதலையில் அம்பலப்பட்டுப் போனதைச் சரிக்கட்ட, புலிகளுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்வதற்காகவே அறிவிக்கப்பட்ட 48 மணி நேர போர் நிறுத்தம். எதிர்க்கட்சிகளைச் சரிக்கட்டக் கூட்டப்பட்ட சர்வகட்சி கூட்டத்திற்கு திமுகவுக்கு செய்தி தெரிவிக்காதது மூலம் எதிர்ப்புகளைச் சமாளிக்க அவர்கள் தேர்ந்தெடுத்த இழிவான வழிமுறைகள். பிரபாகரன் ஐ. நா. சபைக்கு கடிதம் எழுதியது, லிபியாவின் கடாபியிடம் ஆதரவு கோரியது, இந்திய இராணுவ அட்டூழியங்களைப் பற்றி குறிப்பாக ஆதாரங்கள் சேகரிப்பது; யாழ் நகரில் ஆக்கிரமிப்பு எதிர்ப்பு ஊர்வலத்திற்கான முயற்சிகள்—ஆகிய அரசியல் எதிரிகள் செய்யும் சாதாரண நடவடிக்கைகளைக்கூட ஏதோ அக்கிரமமாகச் சித்தரித்தனர். கடைசியாக, சரணடையும் புலிகளுக்கு கல்வி வசதி, வேலைக்கான பயிற்சி, உணவு—உடை— வேலைவாய்ப்பு, புத்தகங்கள்—பொது மன்னிப்பு வழங்குவதாக ஆசை காட்டினர். இவையெல்லாம் சாதாரணமக்களும் கைகொட்டிச்சிரிக்கும் அற்பத்தனங்கள். சத்துணவு, பற்பொடி, செருப்பு, பிளாஸ்டிக் குடம் போன்ற சலுகைகளில் ஓட்டுப்பொறுக்கியே பழக்கப்பட்ட பாசிச கும்பல் விடுதலைப் போராளிகளின் இலட்சியத்தை விலைகொடுத்து வாங்க முடியுமென்று கனவு காண்கிறது.

இவர்களின் அற்பத்தனத்திற்கு சரியான சூடு கொடுத்தார் ஒப்பந்தம் கைச்சாத்திட்ட அன்று ராஜீவைத் தாக்க முயன்ற அந்த கடற்படை மாலுமி.''ராஜீவைக் கொல்ல முயலவில்லை. அப்படி நினைத்திருந்தால் துப்பாக்கிக் கத்தி முனையால் குத்தியிருப்பேன். அவரை அவமானப்படுத்தவே தாக்க முயன்றேன்!'' ஆயுத ஊழல்—வெளிநாடுகளில் கருப்புப்பணகுவிப்பு ஆகிய பொருளாதாரக் கிரிமினல் குற்றங்களைவிடக் கடுமையான கிரிமினல் குற்றம் இலங்கை ஆக்கிரமிப்பும் ஈழமக்கள் படுகொலையும், இந்தக் குற்றங்களுக்காக அவமானப்படுத்தப்பட்டால் மட்டும் போதாது, தண்டிக்கப்பட வேண்டும்!

● மணி

ஆசிரியரும் வெளியிடுபவரும் : எஸ். மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு [illegible]ப்பேட்டை, சென்னை—600015.
அச்சிடுபவர்: பிரேம் பிரஸ், 107-A பெரியார் பாதை(மேற்கு) சென்னை—600094.

படிப்பகம்

www.padippakam.com



2,000 ரஷிய கலைஞர்களுடன் நாடு பூராவும், ஒரு ஆண்டு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்படும் ரஷிய கலைவிழாவின் ஆரம்ப நிகழ்ச்சியின்போது, ரஷிய பிரதமர் நிகோலாய் ரிஸ்கோவும், இந்திய பிரதமர் ராஜீவும் டில்லி நேரு பூங்காவில் திறந்து வைத்த லெனின் சிலை இது. 2.65 மீட்டர் உயரமுள்ளது. முழுவதும் வெண்கலத்தால் செய்யப்பட்டது. ரசியாவில் உருவானது.

இரு நாடுகளிடையேயான தொழில்நுட்பக் கூட்டு, வர்த்தக உறவு அனைத்திற்கும் மேலாக இரு நாடுகளிடையிலான நட்புறவை (ராணுவ கூட்டு) போற்றும் முகமாக இச்சிலை திறக்கப்பட்டுள்ளது என்கிறார்கள். ஆனால், மறைக்கப்பட்ட உண்மைக் காரணம் வேறு.

கடந்த ஆண்டு ரசியாவில் நடந்த இந்திய கலைவிழாவின் போது பாசிச இந்திராவுக்கு மாஸ்கோவில் சிலை எழுப்பி, இறந்த இந்திராவின் 'அருமை, பெருமை'களை உயர்த்தி பிடித்தது, ரசியாவின் புதிய ஜார்களான, கோர்பச்சேவ் கும்பல். அதற்கு நன்றிக் கடன்தீர்க்கும் பொருட்டுதான் லெனின் சிலை திறப்புக்கு பாசிச ராஜீவ் தலையசைத்து இருக்கிறார்.

# இதுதான் இன்றைய இந்தியா

“உலகில் முதன் முதலாக சோசலிஸ்ட் அரசை நிறுவி மாபெரும் புரட்சிக்குத் தலைமை தாங்கிய மாமேதை லெனின்” என்று லெனினுக்கு புகழாரம் சூட்டினார் பாசிச ராஜீவ். ரசிய பிரதமரும், அவர்களது எடுபிடிகளான போலிக் கம்யூனிஸ்ட்டுகளும்ராஜீவின்பெரிய மனதைக் கண்டு மெய்சிலிர்த்துப் போனார்கள்.

இதோ, தங்கள் உரிமைக்காக திரண்டெழுந்த ஒரே குற்றத்திற்காக, போலீசு கும்பலின் குண்டாந்தடிக்கும், கொலைவெறிக்கும் இரையாகும் தொழிலாளர்கள். 'மன்னர்'களாக வர்ணிக்கப்பட்டு ஆட்டு மந்தைகளாக நடத்தப்படும்உழைக்கும் மக்களுக்கு, அமைதிவழி, அறவழி போராட்டங்கள் நடத்தக்கூட அனுமதி இல்லை. போராடும் மக்களின்மீது, தடியடி, துப்பாக்கி சூடு நடத்துவதும், சிறை, சித்திரவதை, பொய்வழக்கு போடுவதும் சட்டபூர்வமாகவே அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவை மட்டுமல்ல,போராடும்தொழிலாளர்களின் உரிமையை நசுக்க, அவன் குரல்வளையை இறுக்க, ஏராளமான மக்கள் விரோத கறுப்பு சட்டங்கள் நாள்தோறும் அரங்கேற்றப்படுகிறது.

ஒருபுறம், உலகம் முழுவதும் உள்ள தொழிலாளர்களின் விடுதலைக்காக தம் வாழ்நாள் முழுவதும் போராடிய மாபெரும் பாட்டாளி வர்க்கத் தலைவனுக்கு புகழ் மாலை, சிலை திறப்பு! மறுபுறம், உரிமைகளுக்காக திரண்டெழும் சொந்த நாட்டு மக்களை, ஈவிரக்கமற்ற அடக்குமுறைகள் மூலம் கல்லறைக்கு அனுப்பும் கொடூரம்!

இந்த 'நவீன முற்போக்கு' இரத்த காட்டேரி கும்பல்களை நாம் புதைகுழிக்கு அனுப்புவது எப்போது?



படிப்பகம்